விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 25 றவி ஆகிர் 12 இதழ் 356
யாழ்ப்பாணம் ஞாயிறுக்கிழமை 7 2 82

## முல்லைத்தீவுமாவட்டத்தில் அமைச்சர் 'இராசு'
### மாங்குளத்தில் மின் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்

(துணுக்காய்)

''முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி கருதி முன்னேற்பாடாக எனது அமைச்சு 80 லட்சம் ரூபாவை ஒதுக்கி இந்த மின்சாரதிட்டத்தை இன்று ஆரம்பித்து வைப்பதில் நான் பெருமைப்படுகிறேன். முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி கருதிக் கிராமிய ஒன்றிணைப்புத்திட்டம் ஒன்று தயாரித்து செயல்பட எனது அமைச்சு பல லட்ச ரூபாவை வழங்க இருக்கிறது'' என்று மாங்குளம் சந்தியில் மின் இணைப்பை

(8ம் பக்கம் பார்க்க)

# அரசுடன் பேச்சுவார்த்தை சலுகைகளுக்காக அல்ல

## தேடிவந்த மந்திரிபதவிகளை உதறித் தள்ளினேம்
### காங்கேசன்துறையில் 'அமிர்' விளக்கம்

(மாவிட்டபுரம்)

"ஏதோ சலுகைகளைப் பெறுவதற்காகவே நாம் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறேம் என்று சிலர் தவருன பிரசாரம் செய்கின்றனர். 77-ம் ஆண்டு உங்களில் எத்தனைபேரை மந்திரியாக்கவேண்டுமென ஜனதிபதி கேட்டபோது சுதந்திரத்துக்காக போராடவே எம்மை மக்கள் தெரிவுசெய்தனர். மந்திரியாக்குவதற்கல்ல என அடித்துக் கூறியவர்கள் நாம். அடுத்தடுத்து நடந்த வன்முறைச் சம்வங்களையடுத்து எமது மக்களது உயிர், உடமைகளைப் பாதுகாக்கவே பேச்சுவார்த்தை நடத்துகிறேமே தவிர வேறில்லை."

இவ்வாறு காங்கேசன்துறை புதிய நூல்நிலயத்தை திறந்து வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சி முதல்வரும், காங்கேசன்துறை எம். பியுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர்.

காங்கேசன்துறை அபிவிருத்திச் சபையின் உபஅலுவலக நிர்வாக மேற்பார்வையாளர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் மேலும் அவர் பேசியதாவது:

#### குட்டையைக் குழப்ப முயற்சி

எம்மைப் பொறுத்தவரை ஒற்றுமைதான் இன்று மிக முக்கியமானது. 56ம் ஆண்டு முதல் 77ம்ஆண்டுவரைஎமக்கு எந்த நன்மையும் கிடைக்காததற்குகாரணம் எம்மிடையே உள்ள பிளவுகள்தான். இன்று தமிழர்களுடைய விடுதலை இயக்கம் கூட்டணியே என்று உலகம் ஏற்கிறது. ஆனல் தமிழீழப் போராட்டத்தில் தலைகாட்ட விரும்பும் சிலர் குட்டையைக் குழப்ப முயல்கிருர்கள். அவர்களுக்கும் தமிழீழத்திற்கும் தொடர்பில்லை என்பதை மக்கள் உணர்ந்து

(8ம் பக்கம் பார்க்க)

காங்கேசன் துறைமுகத்தில்
## புதிய துறைமுக மேடையை அமைச்சர் மத்யூ திறந்துவைத்தர்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை துறைமுகத்தின் புதிய துறைமுக மேடையை கைத்தொழில், விஞ்ஞானத் தகவல்கள் அமைச்சர் திரு. சிறில்மத்யூ நேற்றுக் காலை திறந்துவைத்தார்.

காலை 10.05 மணிக்கு அமைச்சர் திரு. சிறில்மத்யூ புதிய துறைமுக மேடையைத் திறந்துவைத்ததும் சிமெந்து தொழிற்சாலைக்கான பாரிய சாதனங்களை ஏற்றிவந்த 'பசுபிக்றிவா' என்றகப்பல் அவற்றை இறக்குவதற்காக புதிய துறைமுக மேடைக்கு வந்தது.

1965ம் ஆண்டு தேசிய அரசாங்கம் பதவியிலிருந்த காலத்தில் இத்துறைமுகத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டு சிமெந்து தொழிற்சாலையின் 3ம் கட்ட வேலைகளில் ஒரு பகுதியாக இப்போது கட்டி முடிக்கபபட்டுள்ளது.

துறைமுகத்துக்கு வருகைதந்த அமைச்சருக்கு கரகம், காவடி, நடனம், மங்களம். பான்ட் வாத்தியத்துடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

யாழ், அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேயைா, சிமெந்து கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அசோகா சோமரத்ன ஆகியோர்அமைச்சரை வரவேற்றனர். பெருந்தொகையான தொழிலாளர்களும் இவ்வைபவத்தில்கலந்து கொண்டனர். (இ)

## 4மாணவர் நீருக்குப் பலி!

(கொழும்பு)

நீராடச்சென்ற வெஸ்லி கல்லூரி மாணவர்கள் நால்வர் நேற்று களனி கங்கையில் மூழ்கி மரணமானுர்கள். நீரா

(8ம் பக்கம் பார்க்க)

யாழ். பொதுசன நூலகம்:
## மேயர் விசுவநாதன் இன்று அடிக்கல் நாட்டுவார்

(யாழ்ப்பாணம்)

யாழ்: பொதுசன நூல் நிலையத்தின் 3ம் கட்டத்துக்கான அத்திவாரக்கல்லை, யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் இன்று மாலை 6 மணிக்கு நாட்டிவைப்பார்.

சென்ற ஆண்டு கலவரத்தின் போது எரிக்கப்பட்ட யாழ். பொதுசன நூல் நிலையத்தை மீள்வித்து புனரமைக்கும் பணியில் வைபவரீதியாக இக் கல் நாட்டுவிழா நடைபெறுகிறது.

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதச் சடங்குகளுடன் ஆரம்பமாகும் இக்கல்நாட்டு விழாவில் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா உட்பட அபிவிருத்திசபை உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணித்

8-ம் பக்கம் பார்க்க)

## 22 திகதியிலிருந்து 28வரை நூலகவாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூல் நிலையத்தின் மீள்விப்புக்குப் பொது மக்களிடம் பொருளுதவிகோரி இம்மாதம் 22ம் திகதி தொடக்கம் 28ம் திகதி வரை நூலக வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இப்பணியில் மாணவர் பங்களிப்பைப் பெறும் நோக்குடன் இம்மாதம் 25ம் திகதி நூலக கொடித்தினத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண. பிதா பிரான்சிஸ் ஜோசேப் அடிகளார் தலைமையில் யாழ் மாவட்டக்கல்லூரி அதிபர்கள் குழு மேற்கொண்டு வருகிறது. (மா)

பேராசிரியர் கல்பகேயை வணிகமாணவர் சந்தித்தனர்
## பகிஷ்கரிப்பை கைவிடுவதா இல்லையா? நாளை முடிவு

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்தைத் திறப்பதற்காக வருகைதந்த உயர்கல்வி அமைச்சின் செயலாளரும் பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவருமான பேராசிரியர் ஸ்டான்லி கல்பகேயை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக மாணவ மன்றத்தின் செயற்குழுத் தலைவர் திரு. ம. ஸ்ரீகிருஷ்ணன் தலைமையில் கழக சபை அறையில் சந்தித்துத் தங்கள் பிரச்னையை விளக்கிக்கூறினர்.

வணிக மாணவ குழுவின் சார்பில் திருவாளர்கள் அன்ரன் ராஜ்குமார், பா. பாலச்சந்திரன், கலைப்பீடப்பிரதிநிதி திரு. பாலச்சந்திரன் ஆகியோர் இடம்பெற்றனர்.

உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி, பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் பி. பாலகிருஷ்ணன் ஆகியோரும் பங்குபற்றினர்.

இச்சந்திப்பு ''வணிக மாணிப்பட்டம்'' வழங்குவது தொடர்பாகவே இடம்பெற்

(8ம் பக்கம் பார்க்க)

பட்டத் தராதரப் பத்திரப். பிரச்னை:
## விரைவில் தீர்ப்பதாக கல்பகேஉறுதி

(யாழ்ப்பாணம்)

''மாணவர்கள் மத்தியில் பலபிரச்னைகள் உண்டு. முக்கியமாக அவர்களின் பட்டப் படிப்பின்தராதரப்பத்திரம் சரியானமுறையில் வழங்கப்படவில்லை என்றபிரச்னை இருக்கிறது. இதை நான் கூடிய சீக்கிரம் தீர்த்துவைப்பேன்'' என்று

(8ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு தொலைபேசி எண்கள்
8-2-82-ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம்
ஈழநாடு ஆசிரியர் பகுதி தொலைபேசி எண்கள்
(பகல்) ---- 8126
(இரவு) ---- 389
நிர்வாகி,
'ஈழநாடு'.
(2205)

## நாவலர்தாசன் ஸ்ரீகாந்தா

(யாழ்ப்பாணம்)

''நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே'' என்று சொல்லிக்கொண்டே இருந்தவர் ம. ஸ்ரீகாந்தா அவர்கள் நாவலர்சபையின் பொதுச் செயலாளரகப் பணியாற்றிய ஸ்ரீகாந்தா அவர்கள் நாவலர் மண்ணிலே — நல்லையம்பதியிலே நாவலர் பெருமானுக்குச் சிலை நிறுவக்காரணமாயிருந்தார். நாவலர் பெருமான் சிலையை நிறுவ முன்னரும் நிறுவியபோதும், நிறுவியபின்னரும் நாவலர் சபை மூலம் அன்னார் ஆற்றிய சைவத் தமிழ்த் தொண்டு மகத்தானது. எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினல் இடர்கள் எல்லாம்போமே என்று பாடிப்பரவிய கொழும்புத்துறை தவமுனிவர் யோக சுவாமிகளில் மிகவும் ஈடுபாடு கொண்டவரான ஸ்ரீகாந்தா அவர்கள் நல்லைக்குமரன் திருவடிகளில் ஐக்கியமாகிவிட்டார்கள் அன்னரின் பிரிவு உள்ளப்பிரிவே''

முன்னைநாள் நிரந்தரச்செயலாளரும், நாவலர் சபையின் பொதுச்செயலாளருமானதிரு. ம. ஸ்ரீ காந்தா அவர்களின் மறைவு குறித்துப் பண்டித மணி நூல் வெளியீட்டுச்சபையின் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் தமது அநுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் அவர்மேலும் குறிப்பிடுகையில் நாவலதாசஞன ஸ்ரீகாந்தா அவர்கள் தமிழ் அறிஞர்களையும் சைவப்

(5ம் பக்கம் பார்க்க)

---

### நந்தாவில் கற்புலத்து அம்பாள்

## இன்று இராஜகோபுர கும்பாபிஷேகம்

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம் மிகவும் பழமையான ஒரு சைவத் திருக்கோயிலாகும். ஒல்லாந்தரின் ஆட்சிக் காலங்களிலேயே, கல்லிலான ஒரு கட்டிடமும், தினமும் இரண்டு நேரப் பூஜையும்' கந்தபுராணப் படிப்பும், ஆண்டில் ஜூன் மாதத்தில் தேர்த் திருவிழாவுடன் கூடிய பத்து நாட்கள் மகோற்சவங்களும் நடந்ததாகத் தெரிகிறது.

பழைய காலங்களில், இந்த அம்பாள் ஆலயம், 'கற்புலத் தம்மை ஆலயம்' எனவும், 'கற்புலத்துக் கண்ணகை அம்மை ஆலயம்' எனவும் விளங்கியதாகவும், பின்னரே 'நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயமாக' வந்ததாகவும் சரித்திரங் கூறும்.

நந்தாவில் வயல்கள் ஒரு பக்கமும், செருக்கப்புலந் தோட்டங்கள் மறுபக்கமுமாய் கொக்குவில் — கோண்டாவில் எல்லையில், மிகுந்த சோலைகளின் நடுவில், இயற்கை அமைவுகளுடன் இந்த ஆலயம் பொலிந்து இருக்கின்றது,

இ. கந்தையா

யாழ்ப்பாணம் — காங்கேசன்துறை வீதியில் நின்றுபார்க்கும்பொழுது ஏழு குளங்கள் நிரம்பிய நந்தாவில் வயல்கள் மாரிகாலங்களில் கடல்போலக் காட்சியளிக்க, கிழக்குத் திசையில் கற்புலத்தம்மை ஆலயம் மிகவும் அழகாகத் தோற்றம் அளிக்கின்றது.

அருள்மிகு மனோன்மணி தேவிக்கு ஒரு சித்திரத் தேர் 1966ல் மிகவும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டதுடன், தேவையான வாகனதிகளும் மற்றும் வெள்ளி அங்கி, ஆபரணங்கள் முதல் சகல கோயில் தேவைகளும் சீர்செய்யப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. 1979ம் ஆண்டு இராஜகோபுரம் ஒன்று அமைக்கப்படவேண்டியதற்குரிய திருவருள் கிடைத்ததையடுத்து, அந்தத் திருப்பணியும் பரிபாலன சபையாரால் ஏற்கப்பட்டது. தாவடியூர் ஸ்தபதியார் திரு,நாகலிங்கம், சோமசுந்தரம் மேற்பார்வையில் வகுக்கப்பட்ட இராஜகோபுரம் மிகவும் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது. சுதை வேலைகளும் மற்றும் வர்ணப் பூச்சுகள், சிற்பங்கள், புராணக் கதைகளெல்லாம் அழகுற அமைத்தவர்கள் தென்னிந்தியாவைச் சார்ந்த தஞ்சாவூர், நந்நிலம், விசலூர் திரு. கே. பன்னீர்ச்செல்வமும் கோஷ்டியாருமாகும். அத்திவாரம் .. தல் முக்கியமான கட்டிட வேலைகளைக் கொக்குவிலைச்சேர்ந்ததிருக.கந்தையாவும் செய்து உதவியுள்ளார். இராஜகோபுர அமைப்புக்கு முன்புறமாக மணிமண்டமும் வரக்கூடிய முறைகளைத் தமது அநுபவங்களைக் கொண்டு தொண்டாகச் சீர் செய்துகொடுத்து உதவியவர்கள் சைவப்பெரியார் என்ஜினியர் திரு. இ. வைத்திலிங்கம். ஊர்ப் பெருமக்களால் உபகரிக்கப்பட்ட நான்கு லட்சம் ரூபா வரை இந்த அம்பாள் திருப்பணிக்கு உபயோகமாகியுள்ளச. முன்மண்டப வேலைகள் இன்னும் பூர்த்தியாகி முடியவில்லை. இந்த நிலையில் தான் இன்று ஞாயிற்றுக்கிழமை, தைப்பூசமும், பௌர்ணமியும் கூடிய துர்மதி ஆண்டு தைத்திங்கள் 25ம் நாள் காலை 10.30 மணிவரை வரும் சுபமுகூர்த்தத்தில் இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் நடப்பதாக, அருள்முகு கற்புலத்து மனோன்மணி அம்பாளின் திருவருள் கூட்டியுள்ளது.

இராஜகோபுரத்தின் அழகும், அழைப்பும் யாரையும் கவரக்கூடிய முறையில் அம்பாளின் திருவருளால் கிடைத்துள்ளது. ஐந்து தளங்களைக் இந்த இராஜகோபுரத்துக்கு இரு பக்கங்களிலும் பாரிய மணிகளையுடைய கோபுரங்கள் அமைந்து அழகு கொடுக்கின்றன. 53 அடி உயரமான இந்த இராஜகோபுரத்தின் ஒவ்வொரு தளமும்அம்பாளின் பலவித அருள்மிகு தோற்றங்களின் அம்சங்களையும் பிரதிபலிக்கின்றன. இரண்டு அழகிய துவாரபாலிகைகள் இருபுறமுங் காவலாயிருக்க, உட்புறமாகச் சூரியன், சந்திரன் அருள்மிகு தேவியை வணங்கி நிற்க, இராஜகோபுர வாயிலில் கமலங்கள் மலர்ந்த இரு அழகிய திருக்கதவங்கள் பொருந்த விளங்குகின்றன. அஷ்டலக்ஷ்மிகளும். அஷ்டசக்திகளும், சப்த மாதாக்களும் விளங்கவும், காமதகனம், சத்தி தாண்டவம், சிவ தாண்வடம், சிவ—பார்வதி இடபாரூடராகக் காட்சியளித்தல், மனோன்மணி, இராஜராஜேஸ்வரி பூஜா அலங்காரங்களும் இன்னும் இவை போன்ற அழகிய சிற்பங்களும் இராஜகோபுரத்தை அலங்கரிக்கின்றன.

பலிபீடத்தைப் பத்திரலிங்கம் என்பார்கள். பலிபீடத்தின் அருகில் நின்று வணங்கும்பொழுது, 'நான்' என்ற ஆணவத்தைப் பலியிட்டு, ஆன்மா அறிவுமயமாகிநின்று, மூலஸ்தானத்தில் உள்ள சூக்கும லிங்கமான மூர்த்தியை

(7ம் பக்கம் பார்க்க)

---

### பாருக்குள்ளே நல்லநாடு - 2

## நதிகள் மீண்டும் பிரவாகிக்கின்றன!

இந்திய சாஸ்திரீய நடன வகைகள், ஒரு மட்டத்தில் புராதனமானவையாகவும் மாற்ற வியலாதன வாகவுமிருந்தாலும் அவை காலந்தோறும் வளர்ச்சியும் வீழ்ச்சியுமடைந்தும்; புதிய அம்சங்களைத் தழுவியும் தன்மயமாக்கியும் வந்திருக்கின்றன.

பிரித்தானிய ஆட்சியில் ஏற்பட்ட வீழ்ச்சி பின்னர் எற்பட்ட சுதந்திர எழுச்சியில் ஏற்றம்கண்டது,

—பரத நாட்டியத்தைப் பார்த்தால், அந்த எழுச்சியில் ஈ. கிருஷ்ணயா சிறப்பான வடிவத்தைப் பெறுகிறார். மிஸ்டென்னென்ட் என்ற வெள்ளைக்காரப் பெண் தமிழ் நாட்டில் தேவதாசிகளின் சதிர் ஆட்டத்துக்கெதிராக இயக்கமொன்றையே ஆரம்பித்தாள். தேவதாசிகளின் ஒழுக்கக்கேடான வாழ்க்கையையும். அதற்குக் காரணமான சதிர் ஆட்டத்தையும் ஒழிக்கவேண்டும் என்று எழுந்த இந்த எதிர்ப்பு இயக்கத்துக்கு ஆதரவும் ஏற்பட்டபோது, இதனை வளரவிடக்கூடாதென்று கிருஷ்ணயர் வெளிப்பட்டார். சுதந்திர போராட்ட வீரரும் வக்கீலுமான அவர், பரதநாட்டியத்திலும் தேர்ந்தவர்; தாமே பெண்வேஷமணிந்து ஆடுபவர் இக்கலையின் பெருமைகளைப் பற்றி உரையுமாற்றி அவர் மேடைகளில் ஆடினர். ஆனல் ஆறு ஆண்டுகள் ஆகியும் எதிர்ப்புதான் வலிமையடைந்து கொண்டிருந்தது!

1931ம் ஆண்டு சென்னை சங்கீத வித்வத் சபையின் (மியூஸிக் அக்கடாமி) செயலாளராக அவர் இருந்த போது அங்கு இக்கலையை அறிமுகஞ் செய்வதற்கு அவர் முயன்றார் திருவாளொளி புத்தூர் கல்யாணியின் புதல்விகளது பரத நாட்டியத்தை அவர் அங்கு ஏற்பாடு செய்து நடாத்திய போது மிகச் சிலரே அந் நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள்.

1932ம் ஆண்டு சங்கீத வித்வத் சபையில் 'பரதநாட்டியத்தை சங்கீத வித்வத் சபை அங்கீகரிக்க வேண்டும்' என்று ஒரு தீர்மானத்தை கிருஷ்ணயர் கொண்டுவந்தார். நீண்ட விவாதத்துக்குப் பின்னர் அத் தீர்மானம் நிறைவேறியது. இதுகிருஷ்ணயருக்குகிடைத்த ஒரு பெருவெற்றியாக அமைந்தது. சங்கீத வித்வத் சபையின் இந்த அங்கீகாரம் பரத நாட்டியக்கலைக்கு மீண்டும்

மாலி

ஒரு கௌரவமான அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுப்பதில் ஒரு மைல் கல்லாக அமைந்தது.

1935 ஜனவரி முதலாந்தேதி சங்கீத வித்வத் சபையில் நடைபெற்ற பந்தணை நல்லூர் சகோதரிகளின் நடனத்தைக் கண்டுதான் ருக்மணிதேவி இந்த அரங்கினுள் பிரவேசித்தார். அவுஸ்திரேலியாவில் பிரபல மேலைத்தேய 'பலே' நடனக்கலைஞர் அனு பாங்லோவா (Anna Pavlova)வின் நடனத்தைக்கண்டு லயிப்புற்று அவரிடம் சிறிதுகாலம் அந் நடனத்தை கற்றும் திரும்பிய வேளையில்தான் இந்த பரத நாட்டிய நிகழ்ச்சி ருக்மணி அருண்டேலைக் கவர்ந்தது. தாமும் அக்கலையைக்கற்க அவர் தீர்மானித்தார்.

கிருஷ்ணயரின் ஆலோசனையுடன் மயிலாப்பூர் கௌரி அம்மாள், பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோரிடம் பயின்று, 1936 மார்ச்சில் ருக்மணிதேவியின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. உண்மையில் அது ருக்மணி தேவியின் அரங்கேற்றமாக அல்ல, 'பரத நாட்டியத்தின் அரங்கேற்றமாகவே இருந்தது! ருக்மணி தேவி இக்கலையில்ஈடுபட்டதும் உயர் குடும்பத்தைச் சார்ந்தவர்களும் அக்கலையை கற்க முற்பட்டார்கள். உடை, பக்கவாத்தியம், பாடல்களிலெல்லாம் பல சீர்திருத்தங்களை ருக்மணி அருண்டேல் செய்தார்.

1934 இல் காசியில் நடைபெற்ற அகில இந்திய சங்கீத மாநாட்டில் பாலசரஸ்வதியுடன் சென்று கிருஷ்ணயர் பரதநாட்டிய நிகழ்ச்சிஅளித்த போது ரவீந்திரநாத் தாகூரின் ஊக்குவிப்பும் அவருக்குக் கிடைத்தது.

கிருஷ்ணயா ருக்மணிதேவி அருண்டேல் ஆகியோருடன்

(7ம் பக்கம் பார்க்க).

---

## கசூரினா கிறிஸ்தவ பாசறை மன்று

''காரைநகரின்அழகுமிகுந்த கடற்கரைப் பிரதேசத்தில் கெம்பீரமாகக் காட்சியளிக்கின்றது இக்கவின் மிகு கட்டிடம். இதனை அன்று நிர்மாணித்தவர்கள் கிறிஸ்த கல்லூரிப் பேரவை என்ற ஸ்தாபனத்தார் ஆகும். கிறிஸ்தகல்லூரிகளின் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் அயராத உழைப்பினல் தோன்றிஇன்று இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள இப் பாசறை மன்றுக்காக யாழ்ப்பாண வாலிபர்கள் யாவரும் இறைவனைப் போற்ற வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இம்மன்றில் வை. எம். சி. ஏ, ஸ்தாபனங்கள், அரிமாக் கழகங்கள், சாரணர் குழுக்கள், கல்லூரிகளின் இலக்கிய மன்றங்கள், பல்கலைக் கழகத்தின் வாலிபர் கழகங்கள் தமது வருடாந்த பாசறைகளையும், தியான திருநாட்களையும் கடந்த கால்நூற்றுண்டுகளாக நடாத்தி வருகின்றனர்.

### கிறிஸ்த கல்லூரி பேரவை

யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளினது கிறிஸ்தவ ஆசிரியர்களையும், மாணவர்களையும் கொண்ட இவ்வமைப்பு 1934ம் ஆண்டு உதயமாகியது. யாழ்ப்பணக் கல்லூரியின் முன்னள் அதிபர் அருட்திரு ஜோன். பிக்னல் அடிகளாரும், யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியின் முன்னள் அதிபர் அருட்திரு ஹென்றி பீற்றோ அடிகளாரும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்னள் அதிபர் அருட்திரு காஷ் அடிகளாரும் இவ்வமைப்பின் முன்னோடிகளாவர். வெள்ளிவிழா கண்ட இம்மன்றின் தலைவராக பரி. யோவான் கல்லூரி ஆசிரியர் திரு ஆர், ஈ. யே, ஏ. சேதுகாவலரும், செயலாளராக யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு எஸ். ஜெபநேசனும் கடமையாற்றுகிறார்கள்.

1956ம் ஆண்டு கிறிஸ்த கல்லூரிப் பேரவையினர் தமக்கு நிரந்தரமான ஒரு பாசறை அமைக்கப்படல் வேண்டுமெனத் தீர்மானித்தனர். தகுந்த இடமொன்றைத் தெரிவு செய்ய பரி. யோவான் கல்லூரியின் முன்னள் அதிபர் அமரர் பி. ரி. மத்தாய், நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. யே. ஜி. அரசரத்தினம், யாழ்ப்பாணக் கல்லூரியின் மதகுரு அருட்திரு பென். பவிங் அடிகளார் ஆகியோர்களிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இக்குழுவினர் மண்குப்பான், அல்லைப்பிட்டி, காரைநகர் ஆகிய இடங்களைப் பரிசீலனை செய்து காரைநகரே சிறந்ததென முடிவு செய்தனர்.

காரைநகரிலுள்ள அழகிய சவுக்கு மரங்களும், அபாய

(7ம் பக்கம் பார்க்க)

---

7—2—82 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று யாழ், திவ்ய ஜீவன சங்கத்தினர் நடாத்தவிருக்கும் வள்ளலார் ஸ்ரீராமலிங்க சுவாமியவர்களின குருபூசைத்தினத்திலே அவர் நினைவாக இடம் பெறும் பாடல்.

## வள்ளலே இராமலிங்கா!

இராகம்—பிலஹரி தாளம்—ஆதி

பல்லவி

வள்ளலே ராமலிங்கா வளமார்ந்த அருள்நிதியே
எல்லையொன் றில்லாத எழிலன்புத் துறவோனே
—வள்ளலே

அனுபல்லவி

தெள்ளத் தெளிந்துணர்ந்து தெவிட்டாநின் பாடலினல்
கள்ளமனக் கறைநீக்கிக் கசிந்துருகும் நிலைவகுத்த
—வள்ளலே

சரணம்

மக்கள் குலமுமவர் நாடிடும் தெய்வ மதும்
உற்றுணர் வார்தமக்கு நிச்சய மொன்றெனவே
எச்சமில்லா துரைத்து அறவழி காட்டிவைத்த
உத்தம ஞானியே உண்மையின் திருவுருவே
—வள்ளலே

அகநிறை அன்பதுவும் உலகாளும் உண்மையதும்
இகபரசுக ந்தருமே ஈடிலாநலம் விழைக்கும்
புவிதனி லிவையுணர்ந்து பெருநல மடைவீரே
தமர்பிற ரெனகோக்கா தரணிதனி லிவையுரைத்த
—வள்ளலே

மதம்மொழி சாதிகுலப் பேதங்கள் வளர்த்த
தல்லால்
இதம்தரு சன்மார்க்க சுகந்தனி லுயர்ந்தோமா
நிதம்நித மிவையுணர்ந்து நானிலத்தோர் வாழவழி
பதந்தரு முன்பாடலினல் பாங்காகச் சொல்லிவைத்த
—வள்ளலே

--அ.நமசிவாயம்

## பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேறியது

# ஐ.நா. உறுப்புநாடுகள் இஸ்ரேலுடன் தொடர்புகளை துண்டிக்கவேண்டும்

## 86 நாடுகள் ஆதரவு, 21 நாடுகள் எதிர்ப்பு

நியூயோர்க், பெப். 6

சிரியாவுக்குச் சொந்தமான கோலான்குன்றுப்பகுதிகளை இஸ்ரேல் தன் உடைமையாக்கிக்கொண்டதைக் கண்டித்தும், அதற்காக இஸ்ரேலைத் தண்டிக்கும்விதத்திலும் சகல உறுப்பு நாடுகளும் அந்நாட்டுடனை தொடர்புகளைத் துண்டித்துக்கொள்ளவேண்டுமென்ற தீர்மானம் நேற்று ஐ. நா. பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை 39 நாடுகள் பொதுச்சபையில் சமர்ப்பித்திருந்தன.

கோலான்குன்றுகளை தன்னுடையதாக்கிக்கொண்டமைக்காக இஸ்ரேலுக்கெதிராக பொருளாதார — இராஜதந்திரத் தடைகளை விதிக்கவேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்று ஏற்கனவே பாதுகாப்புச்சபையில் தாக்கப்பட்டு அமெரிக்காவினுல் இரத்துச் செய்யப்பட்டது தெரிந்ததே.

பொதுச்சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தையும் அமெரிக்கா எதிர்த்தது. அமெரிக்கப் பிரதிநிதி பேசும்போது, இன்றைய நிலையில் இத்தீர்மானம் அவசியமற்றது என்றார். பகைமைப் போக்கிற்கு இது தூபமிடும் என்று அவர் குறிப்பிட்டார். இஸ்ரேலிய பிரதிநிதி திரு. ஜெருடாபினம் இத்தீர்மானத்தை மிக மோசமாகக் கண்டித்து உரை நிகழ்த்திஞர். இது ஒரு வெட்கக்கேடான தீர்மானம், பொய்யர்களால் கொண்டுவரப்பட்டுள்ளது, ஐ. நா. ஸ்தாபனத்துக்கே அவமானம் என்று அவர் கண்டித்தார்.

தீர்மானத்தை ஆதரித்து 86 நாடுகள் வாக்களித்தன. 21 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. 34 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் நடுநிலைமை வகித்தன.

வாக்கெடுப்பு முடிந்ததும் இஸ்ரேலிய பிரதிநிதி சபையிலிருந்து வெளியேறிஞர். சிரியாவின் வெளிநாட்டு அமைச்சர் அங்கேயே இருந்தார். அவரை பல பிரதிநிதிகள் சந்தித்துப் பாராட்டி கைகுலுக்கிஞர்கள்.

---

### லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

மத்திய கிழக்கில் ஒரு லட்சம் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்காக தொழில் திணைக்களம் விசேட நடவடிக்கைகளை எடுக்கத்தொடங்கியுள்ளது.

இதுதொடர்பாக மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களிடம் வேலைவாய்ப்புப் பற்றிய விபரங்கள் தொழில் திணைக்களம் கோரியுள்ளது.

சவூதிஅரேபியா, அபுதாபி ஆகிய இருமத்திய கிழக்கு நாடுகளில் மட்டுமே இலங்கை தூதரகங்கள் உள்ளன. மத்தியகிழக்கு நாடுகளில் 45,000க்கும் அதிகமான இலங்கையர்கள் தற்போது வேலைசெய்து வருவதாக தொழில்திணைக்களத்தைச் சேர்ந்த உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (வெ)

---

### அரிசி விலை சரிகிறது

(பண்டத்தரிப்பு)

நெல் அறுவடை ஆரம்பமாகியதைத். தொடர்ந்து பண்டத்தரிப்புப் பகுதியில் அரிசியின் விலை சரியத் தொடங்கியுள்ளது. கிலோ 7.50 ஆக விற்பனை செய்யப்பட்டஅரிசி தற்போது ரூ.6.25 6.00 ஆக பண்டத்தரிப்பு சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதேவேளை பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை நிலையத்தில் நாட்டு அரிசி கிலோ ஒன்று 6 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

---

வேட்டை நாயின் பெயருக்கு

### கண்டி மேயர் ஆட்சேபம்

(கண்டி)

பிரிட்டனைச் சேர்ந்த வேட்டை நாய் ஒன்றிற்கு புத்தபகவானின் சிறுபராயப் பெயரான 'சித்தார்த்தர்' என்ற பெயர் சூட்டப்பட்டிருப்பதற்கு கண்டி மேயர் திரு. திலக் ரத்ணுயக்கா கடுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

கண்டி மாநகரசபைக் கூட்டம் ஒன்றின்போதே மேயர் திரு. திலக் ரத்ணுயக்கா 'சித்தார்த்தர்' என்ற பெயர் சூட்டப்பட்ட மேற்படி வேட்டை நாயின் பத்திரமொன்றின் பிரதியை சபையில் காட்டி தனது கடுமையான எதிர்ப்பினையும் வெளிப்படுத்திஞர்.

மேயர் தனது ஆட்சேபனையில், வேட்டை நாய் ஒன்றிற்கு புத்தபகவானின் சிறுபராயப் பெயரான 'சித்தார்த்தர்' என்ற பெயர் சூட்டப்பட்டிருப்பது அவமானத்திற்குரியதொன்ருகவிருக்கின்றது எனத் தெரிவித்தார்.

மாநகரசபை மேயரின் ஆட்சேபத்திற்கு பூரண ஆதரவு தெரிவித்ததுடன், இவ்விடயத்தை கலாசார அமைச்சின் கவனத்துக்கும் கொண்டுவருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (கி)

---

விபத்து மரணங்கள் அதிகரிப்பு

### வெளியே செல்லும்போது அடையாள அட்டையை வைத்திருங்கள்

-- பொலிசார்

(கொழும்பு)

பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டுச் செல்லும்போது அடையாள அட்டையை அல்லது தமது பெயர் விலாசம் எழுதப்பட்ட ஒரு துண்டையாவது உடன் எடுத்துச் செல்லும்படி பொலிஸார் கேட்டுள்ளனர்

விபத்துக்கள் அதிகரித்துள்ளதை அடுத்து பிரேதச் சாலைகளில் அடையாளம் காணப்படாமல் வைக்கப்பட்டிருக்கும் சடலங்களின் எண்ணிக்கை அதிகளவில் அதிகரித்துவருவதையிட்டும், பல நாட்களுக்கு அங்கேயே அனுதரவாக சடலங்கள் வைக்கப்பட்டிருக்கும் நிலையைத்தவிர்க்கவுமே மேற்படிகோரிக்கையை பொலிசார் விடுத்துள்ளனர்.

பொலிஸ் தலைமைப்பீடம் இதுபற்றித் தெரிவிக்கையில் நாளுக்குநாள் அதிகரித்து வரும் வாகன நெருக்கடியினுல், பல விபத்துமரணங்கள் ஏற்படுவதாகவும், இதனுல் மரணமான சிலரது சடலங்களை தகுந்தமுறையில் அடையாளம் காணமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதனுலேயே சகலரையும் அடையாள அட்டையை வைத்திருக்கும்படி கேட்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளது.

மேலும் பொலிஸார் அடையாள அட்டையை வைத்திருப்பதன் மூலம் இலகுவாக உரியவரை அடையாளம் காண முடிவதுடன், குற்றவாளிகளையும் கண்டுபிடித்து குற்றச்செயல்களை கட்டுப்படுத்தலாம் எனவும் தெரிவித்துள்ளனர். (கி)

---

பொலிஸ்

### உத்தியோகஸ்தர்களது உடமைகள் பற்றி விசாரணை

(கொழும்பு)

தமது சேவைக்குரிய வருமானத்திற்கும் அப்பாற்பட்ட வகையில் சொத்துக்களை வைத்திருக்கும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களது உடமைகள் பற்றியும் அவற்றைச் சேகரித்துக் கொண்டவிதம் பற்றியும், விசேட உயர்மட்ட விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

சிலபொலிஸ் சேவை உத்தியோகஸ்தர்கள், டாக்ஸிகள், பயணிகளை ஏற்றிச்செல்லும் வான்கள், மற்றும் பெரிய பஸ்வண்டிகளது சொந்தக்காரர்களாக இருக்கிருர்கள் என்றும், தமக்குக்கிடைத்த முறைப்பாடுஒன்றல் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் மூன்று பெரிய பஸ்வண்டிகளின் உரிமையாளராக விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அவ் அதிகாரி இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் பொலிஸார் இவ்விதம் பெரும் உடமைகளுக்கு உரிமையாளராக விருப்பது சம்பந்தமாகத் தமக்குக் கிடைத்த முறைப்பாடுகள் மேற்படி பொலிஸ் சேவைக்கு இழுக்கைத்தேடித் தருவதனுலேயே, விசேட உயர்மட்ட விசாரணைகள் முடுக்கி விடப்பட்டிருப்பதாகக் கூறிஞர்.

பொலிஸ் உத்தியோகஸ்தர் மட்டுமல்லாது, அவர்களது நெருங்கிய உறவினர்களும் ஏனைய உறவினர்களும் கூட பெரும் உடமைகளின் உரிமையாளராக விருப்பதாகவும், பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பற்றிய முறைப்பாடுகளை ஏற்பதற்கென விசேடமாக நியமிக்கப்பட்ட பிரிவுக்கே மேற்படி முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

---

### மோசடி அமைச்சர் பதவிநீக்கம்

டார்-எஸ்-சலாம் பெப். 6

மோசடிக்குற்றச் சாட்டின் பேரில் தன்சானியா விவசாய அமைச்சர் திரு. மொன்கே அந்நாட்டின் ஜனுதிபதியால் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

புதிய விவசாய அமைச்சராகத் திரு. ஜோன் பப்டிஸ் ஜூவண்டா நியமிக்கப்பட்டுள்ளார். (இ)

---

### யாழ். நகரில் இந்து கலாசார ஸ்தாபனம்

ரூ. 1 கோடி செலவில் உருவாகும்

(யாழ்ப்பாணம்)

ஒரு கோடி ரூபா செலவில் உலக இந்து மகாசபை (விஸ்வ ஹிந்து பரிஷத்) யின் இலங்கைக் கிளை, யாழ்ப்பாண நகரில் இந்து கலாசார மத்திய ஸ்தானம் ஒன்றை விரைவில் கட்ட இருக்கிறது,

கேட்போர் கூடம், நூலகம், அலுவலகங்கள், விருந்தினர் விடுதி என்பனவற்றை இந்த மத்திய ஸ்தாபனம் உள்ளடக்கியிருக்கும்.

''வேற்றுநாட்டு இந்துமதத்தவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் பட்சத்தில் ஆசாரமுறைப்படி இங்கு தங்குமதற்கு வசதியில்லாததைக் கருத்தில் கொண்டே இந்த ஸ்தாபனம் அமைக்கப்படவிருப்பதாகவும், இதற்கு ஏற்படும் செலவை இலங்கையிலுள்ள நமது மக்களிடமிருந்தே திரட்டுவதென்று சபைதீர்மானித்துள்ளதாகவும் மகாசபையின் இலங்கைக் கிளைத் தலைவர் திரு யோகேந்திரா துரைசுவாமி தெரிவித்துள்ளார்.

அனுப்பப்படும் நன்கொடைப் பணத்தை திரு கே. எஸ். வேல்முருகு, பொருளாளர், உலக இந்து மகாசபை (இலங்கைக் கிளை) என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

---

## 77, 81 இலங்கை இனக்கலவரங்களை அடுத்து

# இந்தியாவுக்கு குடிபெயர்ந்தவருக்கு

# தமிழக முதல்வர் நிதியிலிருந்து $2\frac{1}{2}$-லட்சம் ரூபா

## மண்டபம் முகாமிலிருந்து 898 பேருக்கு நிவாரணம்

சென்னை, பெப். 6

இலங்கையில் இடம்பெற்ற இனக் கலவரங்களை அடுத்து அங்கிருந்து குடிபெயர்ந்து தமிழகம் வந்த இந்தியத் தோட்டத் தொழிலாளர்களைத் தமிழகத்தில் குடியமர்த்துவதற்கு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் முதல் அமைச்சர் நிதியிலிருந்து 2 லட்சத்து 62 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

1977, 81ம் ஆண்டுகளில் இலங்கையில் இடம்பெற்ற கலவரங்களை அடுத்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்த 262 குடும்பங்களைச் சேர்ந்த 898 பேர் இதுகாலவரை மண்டபம் முகாமில் தங்கியிருந்தனர்.

முதல் அமைச்சர் நிதியிலிருந்து வியாபாரம் செய்வதற்கு குடும்பம் ஒன்றுக்குத் தலா 3 ஆயிரம் ரூபாவும் மற்றும் செலவுகளுக்கு ஆயிரம் ரூபாவும் வழங்கபட்டடும் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோரை தமிழகத்தில் குடியமர்த்துவது இதுவே முதல் தடவையாகும். (இ)

---

### யாழ். நகரில் கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை அவைக்காற்று கலைக்கழகத்தின் மூன்ருண்டு நிறைவையொட்டி, யாழ். வீரசிங்கம மண்டபத்தில் இம் மாதம் 20, 21ஆம் திகதிகளில் நாடகம், நடனம், இசை கூத்து ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

முகமில்லாத மனிதர்கள் நாடகமும், ''காரசாரம்'' மெல்லிசை நிகழ்ச்சியும் 'நர்த்தனக்கோலம்' நடன நிகழ்ச்சியும், மலையக மரவுவழி 'காமன் கூத்து' நிகழ்ச்சியும் 'ஒருயுகத்தின் விம்மல்' ஆகிய நாடகமுமே மேற்படி தினங்களில் மேடையேறுகின்றன

அப்பாவையும் அம்மாவையும்

# கள்ளர் வெருட்டுகிறார்கள் என்று கூறி இராசலிங்கத்தைக் கூட்டிவந்தேன்

## நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

'2 வது எதிரியும் 4வது எதிரியும் சம்பவதினம் நள்ளிரவு எனது தகப்பனாரைப் பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். நான் பயத்தினால் கந்தையா இராசலிங்கம் என்பவரின் வீட்டுக்குச் சென்று நித்திரையாயிருந்த அவரை கூப்பிட்டு, ஐயாவையும் அம்மாவையும் கள்ளர் வெருட்டுகிறார்கள், வருகிறீர்களா? என்று சொன்னேன்; அவர் என்னுடன் டோர்ச்லைட் கொண்டுவந்தார்.

நீர்வேலியில் நடைபெற்ற கொலை, கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த பூதத்தம்பி தனபாலசிங்கம் (18 வயது) மேற்கண்டவாறு தெரிவித்தார்,

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி.ஜோகநாதன் முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவ்வழக்கில் 81ஜூலை 14ம் திகதி இரவு நீர்வேலியில் கந்தையா இராஜலிங்கம் என்பவரை கொலைசெய்ததாகவும், அதே இடத்தைச் சேர்ந்த பூதத்தம்பி சிவக்கொழுந்து வீட்டில் 3,4_0 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி மற்றும் ரொக்கப்பணத்தை கொள்ளை அடித்ததாகவும் வை. மகாலிங்கம், பெ, குருகுலசிங்கம், சி, மகாலிங்கம், இ. பாலசிங்கம், ச.ரவீந்திரன் ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

வழக்காளி தரப்பில் பொலிசாரின் உதவியுடன் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும், எதிரிகள் தரப்பில் சட்டத்தரணி ஏ. தெய்வேந்திரமும் ஆஜராகி இருந்தனர்

பூதத்தம்பி தனபாலசிங்கம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

நான் 6ம் வகுப்புவரை படித்திருக்கிறேன். அதன் பின்பு கமம் செய்கிறேன். அத்தியார் இந்துக்கல்லூரியில் படித்தேன் இறந்த இராசலிங்கத்தை எனக்குத் தெரியும். அவருடைய வீடு எனது வீட்டுக்கு 80 யார் தூரத்திலிருக்கும். அவர் கமம் செய்வார். சம்பவதினம் அவர் எங்களுக்கு உதவி செய்வதற்காகவந்தார்.

சம்பவதினம் நான் ஆட்டுக் கொட்டிலில் படுத்திருந்தேன் அன்று இரவு நித்திரையாயிருக்கும் போது, ஒரு சத்தம் கேட்டது நான் எழும்பி குசினிஜன்னலில்நின்றுபார்த்த போது இருவர் நிற்பதைக்கண்டேன்.

### தகப்பனாரைப் பயமுறுத்தினார்கள்

2வது எதிரியும் 4 வது எதிரியும் நின்றார்கள். அவர்கள் எனது தகப்பனாரை பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள் அதன்பின்பு நான் பயத்தினால் இறந்த இராசலிங்கத்தை கூட்டிவரச்சென்றேன்

நித்திரையாயிருந்தஅவரைக் எழுப்பி கூட்டிக்கொண்டு வரும் போழுது வழியில் இறந்தவர் போய் சந்திரனையும் கூட்டிக்கொண்டு லைட்டுடன் வந்தோம்.

இறந்த இராசலிங்கத்தை எழுப்பி ஐயாவையும் அம்மாவையும் கள்ளர் வெருட்டுகிறார்கள். ஒருக்கால் வருகிறீர்களா? என்றேன்.

2ம், 4ம் எதிரிகளைக் காணும் பொழுது அவர்களுடைய கைகளில் டோர்ச்லைட்,பொல்லு ஆகியன இருந்தன.

இச்சம்பவத்துக்கு முன்பு மூன்றும் எதிரியைத் தெரியும், நடைபெற்ற 1வது அணிவகுப்பில் 1ம், 2ம் எதிரிகளையும் 2வது அணிவகுப்பில் 3ம், 4ம் எதிரிகளை அடையாளம் காட்டினேன்.

### இறந்தவர்'ஐயோ'என குளறினார்

வீட்டிலிருந்து வெளியேறிய 3 எதிரிகளும் இராசலிங்கத்துடன் அடிபட்டார்கள், பின்பு 4ம் எதிரி வெளியில் வந்து இறந்தவருடன் அடிபடும் பொழுது இறந்தவர் ஐயோ என்று குளறிக் கேட்டது.

இறந்தவரும் என்னைப்பின் தொடர்ந்து வந்தார். பின்பு நாங்கள் வடகிழக்குப்பக்கமாக கல்லால் எறிந்தோம். அந்தப்பக்கமாக எதிரிகள் ஓடினார்கள்.

பின்பு நாங்கள் இறந்தவரின் வீடுசென்றோம். வழியில் உள்ள எருக்கும்பத்துக்கருகில் எனக்கேதோ செய்கிறதென்று அவர் கூறிவிழுந்துவிட்டார்.

நான் சந்திரன் என்பவரைக் கூப்பிட்டு, பின்பு அவருடன் இறந்தவரைத் தூக்கிக் கொண்டு இறந்தவர் வீட்டுக்குச் சென்றோம.

காரில் ஆஸ்பத்திரிக்கு இறந்தவரின் தம்பியாரும் சந்திரனும் சொண்டு சென்றார்கள்.

அதன்பின்பு நான் வீட்டிற்கு வந்தபோது அங்கிருந்த சாமான்கள் களவுபோனதை அறிந்தேன்.

இறந்தவருடன் 4ம் எதிரி அடிபடும்பொழுது இறந்தவர் ஐயோ என்றுகத்தினார். அதனால் 4ம் எதிரிதான் குத்தியிருக்கவேண்டுமென்று நான் ஊகித்தேன். ஆனால் நான் குத்தியதைநேரில்காணவில்லை.

நான் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு தனியேபோனேன் அசோகநாதனும்,சந்திரநாதனும் பின்புவந்தார்கள். அவர்கள் ஏன் வந்தார்கள் என்று தெரியாது.

நான் பொலிசாருக்கு அசோகநாதனும் சந்திரநாதனும் எனதுசகோதரி கலியாண எழுத்துக்கு தரகுவேலை பார்த்தபடியால் இவர்களைப் பிடித்தால்தான், எதிரிகளைப் பிடிக்கமுடியும் என்றேன்.

பூதத்தம்பி சிவக்கொழுந்து (41 வயது) சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது.

சட்: இறந்த ராஜலிங்கத்தை எவ்வளவுகாலம் தெரியும்? சிறுவயதிலிருந்து தெரியும்.

சட்: அவருக்கும் எமக்குமிடையில் சம்பவம் நடப்பதற்கு 2 வருஷத்துக்கு முன்பு காணிப்பிரச்சனை இருந்தது. இல்லை.

சட்: உமது வீட்டுக்கும் இறந்தவர் வீட்டுக்குமிடையில் வேறுவீடு இல்லை. இல்லை.

சட்: வழமையாக எங்கே படுக்கிறது? என் வீட்டுவிறுந்தையில்.

சட்: உமது வீட்டில் எத்தனைவிறுந்தை? ஒரு விறுந்தை

சட்: நீர் படுத்திருந்த விறுந்தை எங்கேயிருக்கிறது? வீட்டுக்குள்.

சட்: உங்களுக்கு அடுத்தடுத்துயார் படுத்திருந்தது?

நான், மகள் அன்னலட்சுமி, கணவர், மகன் தனபாலசிங்கம் ஆட்டுக்கொட்டிலில் படுத்திருந்தார்.

சட்: அன்று சொன்னீர் உமது கணவர் படுத்திருந்தது குசினியில் என்று? நான் அன்று சொன்னது குசினியில் என்று தான்.

சட்: சம்பவதினம் 1ம் எதிரியும் 3ம் எதிரியும் வந்து கதவைத்திறவுங்கள் ; என்று சொன்னார்கள்? ஆம்.

சட்: உங்களுக்கு நிலவு வெளிச்சமோ லைட் வெளிச்சமோ நன்றாகத் தெரிந்தது?—கதவு திறந்தவுடன் நிலவு வெளிச்சம் பகல்போல் தெரிந்தது.

சட்: திட்டவட்டமாக எத்தனைபேர் வந்தது?— 4 பேர்.

சட்: இந்த சம்பவம் சம்பந்தமாக எத்தனை பொலிஸ் நிலையத்துக்குசொன்றீர்? — சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு மாத்திரம் சென்றேன்.

சட்: ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்குச் சென்றீரா?—இல்லை.

சட்: 3ம் எதிரிக்கு கலியாண எழுத்து நடந்த அன்று அவருடன் அசோகநாதன்வந்தார்—ஆம்.

சட்: 3ம் எதிரிக்கும் உமது மகளுக்கும் கலியாண எழுத்து எப்ப நடந்தது? — ஞாபகமில்லை.

சட்: கலியாண எழுத்து உமது வீட்டிலா நடந்தது? ஆம்.

சட்: கலியாண எழுத்துப் பதிவாளரைத் தெரியுமா? — தெரியாது.

சட்: அசோகநாதன் சந்திரநாதன் உமக்கு என்ன முறை? —அவர் எனக்கு உரியவர்களல்ல; கல்யாண எழுத்துக்கு வந்தவர்கள்.

சட்: உமது மகளை கல்யாணம் கட்டியிருக்கும் வாசுதேவனுக்கும் அசோகநாதனுக்கும் சந்திரநாதனுக்கும் என்ன தொடர்பு? எனக்குத் தெரியாது.

சட்: சம்பவ தினம் உனது மருமகன் வாசுதேவன் வீட்டிலிருந்தாரா?—இல்லை.

சட்: 1ம் எதிரி வந்து கைவிளக்கை அணைத்த பின்பு வேறு விளக்கு இருந்ததா? — இல்லை.

சட்: 1ம் எதிரி கொண்டு வந்த டோச்லைட் வெளிச்சத்தில் அடையாளம் கண்டீர்? —ஆம்.

சாட்சி தொடர்ந்து கூறியதாவது: சம்பவம் நடக்கும் பொழுது எனது மகன் தனபாலசிங்கம் ஆட்டுக்கொட்டிலில் படுத்திருந்தார். அவர் இறந்தவரை கூப்பிட்டது தெரியாது.

மகன் இறந்த ராசலிங்கத்துடன் வந்தார். அவர் வரும் போது, விறுந்தையிலிருந்து ஜன்னலூடாகப் பார்த்தேன். இராசலிங்கம் கொண்டுவந்த டோச்லைட் வெளிச்சத்தைக் கண்டவுடன் வீட்டிற்குள்ளிருந்த மூவரும் வெளியில் சென்றனர். அப்பொழுது ராசலிங்கத்துடன் முட்டுப்பட்டு தள்ளுப்பட்டு அடிபட்டனர். அந்நேரத்திலும் எனது கணவனைப் பயமுறுத்திக் கொண்டு குசினியில் நின்றவர் அங்கே நின்றார். [illegible]

காயம் என்னமாதிரி வந்ததென்று எனக்குத் தெரியாது. இறந்தவர், குத்திப் போட்டார் என்று சொல்லி சத்தமிட்டார்.

எனது மகளுக்கும் 3வது எதிரிக்கும் கலியாண எழுத்து முடிந்து 6மாதத்துக்குப் பின்பு தான் இச்சம்பவம் நடந்தது.

இம்மாதம் 10ம் திகதி விசாரணை தொடர்ந்து நடைபெறும். (மா)

---

இன்று

## தைப்பூசத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் காலை 7 மணிக்குஅபிஷேகமும் நண்பகல் அன்னதானமும் இரவு சுவாமி வீதி உலாவும் நடைபெறும்.

### நீர்வேலி கந்தசுவாமி கோவிலில்

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் பகல் 1008 சங்காபிஷேகமும், இரவு சுவாமி வீதி உலாவும். விசேஷ சங்கீத உபந்யாசங்களும் நடைபெறும்.

### தொண்டைமானாறு செல்வச்சந்நிதிகோவில்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன்ஆலய தைப்பூசத்திருவிழா பகல் 2 மணிக்கு நடைபெறும். (மா)

---

# 'அதிகாரம் மக்களை ஆள்வதற்கு அல்ல சேவையினாலேயே பதவிகள் சிறப்புப் பெறும்'

### மன்னார் புதிய அரச அதிபர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

''அதிகாரம் என்பது பொது மக்களை ஆள்வதற்கு அல்ல. எமக்குக் கிடைக்கும் அதிகாரத்தைக் கொண்டு மக்களுக்கு சேவையை ஆற்ற வேண்டும். அப்பொழுதே நாம் வகிக்கும் பதவியும் சிறப்புப் பெறும் ''

இவ்வாறு தேசிய வீடமைப் புத்திணைக்களத்தில் உதவி ஆணையாளராகப் பணியாற்றி மன்னார் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திரு. தர்மலிங்கம் வாயுதேவன் சொன்னார்.

யாழ். தேசிய வீடமைப்புத் திணைக்கள ஊழியர்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவிற்கு நன்றிதெரிவித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இப் பிரிவுபசார விழா திரு. வே. ஆனந்தராசா தலைமையில் நடைபெற்றது.

அர்சாங்க அதிபர் திரு.வாமதேவன் தொடர்ந்து பேசுகையில் சொன்ன தாவது:—

''உயர் அதிகாரிகள் பொது மக்களுடனும்ஊழியர்களுடன் அன்பாகப்பழக வேண்டும் பொது மக்களுடன் நெருங்கி பழகி அவர்களின் பிரச்னைகளை நீதியான முறையில் அணுகி தீர்த்துவைக்க வேண்டும்.

அன்பாகப் பேசுவதின் மூலமே பிரச்னைகளை தீர்த்து வைக்கலாம் அதிகாரம் செலுத்துவதின் மூலம் பிரச்னைகளை வளர்க்க முடியுமே தவிர தீர்த்துவைக்க முடியாது. இதனைபே நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

பொதுமக்களும் ஊழியர்களும் மனிதர்கள் தான் அவர்களுக்கும் 'மனம்' என்ற ஒனறு உண்டு என்பதை உயர் அதிகாரிகள் உணர்ந்து பணிபுரிய வேண்டும்.

எனக்கு அளிக்கப்படும் பாராட்டுக்கள் எனக்குரியன அல்ல. நான் ஆற்றிய சேவைக்கே அப்பாராட்டுக்கள் உரியன'

திணைக்கள ஊழியர் திரு. சிவசரவணபவன் பேசும் பொழுது கூறியதாவது:—

''எமது திணைக்களம் பிரியா விடை பெற்றுச் செல்லும் உதவி ஆணையாளரினால் பெருமை பெற்றுள்ளது. கோபம் என்றால் என்ன என்று அறியாத இத்தகைய உயர் அதிகாரிகளைக் காண்பது அரிது. ஆயிரத்தில் ஒருவராக விளங்கும் இவருக்கு அரசாங்க அதிபர் பதவி தேடிவந்தது பொதுமக்களுக்கும், நாட்டுக்கும் வரப்பிரசாதமாகும். அவர் எங்கு சென்றாலும் எம் போன்ற ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் சிறந்த சேவையாற்றுவார் என்பது திண்ணம்.''

திரு. பா. வைரவநாதன் வாழ்த்துப்பா பாடினார், செல்வி தி. வசந்தி உட்படப் பலர் பேசினர்.

(புலோலி நிருபர் - கு)

---

## ஜேக்கப் ஆனந்தி கொலை: 6 பேர்மீது குற்றப்பத்திரம்

(யாழ்ப்பாணம்)

ஜேக்கப் ஆனந்தி கொலை வழக்கு சம்பந்தமான குற்றப் பத்திரம் நேற்று யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டது.

கொய்யாத்தோட்டம் பழைய பூங்கா வீதியில் 28—8—81 அன்றிரவு 10 மணியளவில் ஜேக்கப் ஆனந்தி என்பவரைக் கொலை செய்ததாக அன்ரனி செல்வம், அருளானந்தம் எட்மன் விஜயகுமார், அன்ரனி றெஜி பெர்னாண்டோ, வெ. மதுரநாயகம், கஸ்பார் அன்ரன், அன்னராசா றதிக்கா ஆகிய 6 பேர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

அன்னராசா றதிக்கா என்பவர் 1000 ரூபா காசுப்பிணையில் விடப்பட்டுள்ளார்.

மற்றைய 5 எதிரிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது பிணைமனு இம்மாதம் 8ம் திகதி யாழ். மேல் நீதிமன்றத்திலும், கொலை விசாரணை இம்மாதம் 16ம் திகதி யாழ். நீதிமன்றத்திலும் எடுக்கப்படவிருக்கிறது.

முதல் 5 எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரனும், ஆறாவது எதிரிசார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராஜரட்ணமும் ஆஜராகியுள்ளனர். (மா)

---

## ''தமிழர் மத்தியில் பௌத்தம்' விரிவுரை

(யாழ்ப்பாணம்)

''தமிழர் மத்தியில் பௌத்தம் கி. மு. 300—கி பி. 600'' என்ற பொருளில் கலாநிதி கே. இந்திரபாலா விரிவுரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார்.

மேற்படி விரிவுரை இம்மாதம் 10ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 30 மணிக்கு திருநெல்வேலி ஈவ்ளின் ரத்தினம் மண்டபத்தில் நடைபெறும்.

(கி)

# கைதடியில் காலியாகும் கட்டிடத்தில்
# ஆயுள் வேதக்கல்லூரி?

## பெப். 11-ல்பல்கலைக்கழகமான்யக்குழுவுடன் வ.இ.ஆ. வைத்தியர் சம்மேளனம் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடியில் ஆயுள்வேத கல்லூரிக்கென முன்னைய அரசினால் கட்டப்பட்டு இதுவரை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் இயங்கியவந்த கட்டிடத்தில் ஒரு பூரண ஆயுள் வேதக்கல்லூரியை அமைப்பது குறித்து வடஇலங்கை ஆயுள் வேத வைத்தியர்கள் சம்மேளனம் பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின் இக்கட்டிடத்தில் இயங்கிவந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் இன்று முதல் திருநெல்வேலிக்கு இடமாற்றம் செய்யப்படுவதை அடுத்து காலியாகும் மேற்படி கைதடி கட்டிடத்தில் ஒரு பூரணமான ஆயுள்வேதக் கல்லூரியை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு வடஇலங்கை ஆயுள்வேத வைத்தியர்கள் சம்மேளனம் பல்கலைக்கழக மான்யக்குழுவைக் கோரியதைத் தொடர்ந்து இவ்விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வருமாறு மான்யக்குழு அழைப்பு விடுத்திருந்தது. இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ள வட இலங்கை ஆயுள் வேத வைத்தியர்கள் சம்மேளனம் இம் மாதம் 11ம் திகதி மான்யக்குழு உறுப்பினர்களுடன் பேச்சுநடத்தக் கொழும்பு செல்கிறது:

இப்பேச்சு வார்த்தையில் சம்மேளனத்தின் சார்பில் தலைவர்: வைத்தியகலாநிதி சு. ப. இ. இன்னுசித்தம்பி, காரியதரிசி வைத்திய சிரோன்மணி எம். எஸ். சுந்தரம், அமைப்பாளர்: 'பிரதீபம்' ஈ. பி. இராசையா, மேலும் வட இலங்கை சுதேச வைத்திய சபை காரியதரிசியும், லங்கா ஆயுள்வேத கல்லூரி விரிவுரையாளருமாகிய வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னுசித்தம்பி ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

ஆணைக்குழுவின் சார்பில் சுதேசவைத்திய அமைச்சர்: திரு. தர்மசேன ஆட்டிகலை, அவரது காரியதரிசி, பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவின் செயலாளர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே, டாக்டர் எம். எஸ் பெறிபாய், பேராசிரியர் ஏ. டபிள்யூ. மயில்வாகனம் முதலானோர் கலந்து கொள்வர்.

இச்சந்திப்பில் முக்கியமாக ஒரு பூரணத்துவம் வாய்ந்த ஆயுள் வேதக்கல்லூரி யாழ்ப்பணத்தில் அமைப்பதுபற்றியும், தற்போது யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும்லங்காசித்தஆயுள் வேதக் கல்லூரியின்எதிர்காலம் பற்றியும் ஆலோசிக்கப்படுமென்றுடாக்டர்சுகந்தன் இன்னுசித்தம்பி தெரிவித்தார். (இ)

---

### ஆசிரியர்களின்
### சேவைக்காலப் பயிற்சி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை காங்கேசன்துறை, மானிப்பாய் ஆகிய கல்வி வட்டாரங்களைச்சேர்ந்த தமிழ் மொழிப்பாட ஆசிரியர்களுக்கான முதலாம் தவணைக்கான சேவைக்கால பயிற்சி வகுட்புகள் சுன்னுகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் இம்மாதம் 17, 18ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. (இ)

---

### சிறுவர்
### எழுச்சி வாரம்

(மாவிட்டபுரம்)

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாஜத்தின் ஆதரவில் சிறுவர் எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

கடந்த 3ந் திகதி ஆரம்பமான இச்சிறுவர் எழுச்சி வாரத்தில் கல்வி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, ஐக்கிய வளர்ச்சி, உயர்ந்த ஒழுக்கக் கட்டுப்பாடுகளை வளர்த்தல் உட்படப் பல்வேறு நடவடிக்கைகள் சிறுவர்களது எழுச்சிக்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமாஜத் தலைவர் திரு. இ. மு. நாகலிங்கம், பொதுச் செயலாளர் திரு. க. மாயாதிரவியம் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

---

### கைத்தொழில் நிலையத் திறப்பு விழா

(கரவெட்டி)

வதிரி கதிர்காமகோவிலடியில் நிறுவப்பட்டுள்ள கைத்தொழில் நிலையம் இன்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

உடுப்பிட்டி எம். பி. திரு த. இராசலிங்சம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இக்கைத்தொழில் நிலையத்தைத் திறந்து வைப்பார்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி. யுமான திரு எம். சிவசிதம்பரம், பருத்தித்துறை எம்.பி. திரு. கே. துரைரத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்கள். (இ)

---

### பணம் கிடைக்காத கவலையால்
### தற்கொலை

(மாவிட்டபுரம்)

சீட்டு மூலம் கிடைத்த 3000 ரூபாவில், மது அருந்துவதற்கு மனைவி பணம் கொடுக்காததினுல் மனமுடைந்த கணவன் தற்கொலை செய்துகொண்டார்.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த சரவணை தியாகராசாவின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்தினுர். விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

---

### கிரிக்கெட் டெஸ்ட்:
### விசேஷ முத்திரை வெளிவருகிறது

(கொழும்பு)

இங்கிலாந்துக் கோஷ்டியுடன் இம்மாதம் 17ந் திகதி முதலாவது கிரிக்கட் டெஸ்ட்டில் இலங்கைக் கோஷ்டி மோதும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியை யொட்டித் தபாற் திணைக்களம் விசேட முத்திரை ஒன்றை வெளியிடவிருக்கின்றது.

ரூபா 2.50 சதம் பெறுமதியான இம்முத்திரை இம்மாதம் 17ந் திகதியே வெளியிடப்படுமெஸ்று முத்திரை வெளியீட்டுப் பகுதி அதிபர் திரு. எஸ். குணதிலகா தெரிவித்தார், [இ]

---

### அலங்கார உற்சவம்

[சுழிபுரம்]

சுழிபுரம் கம்பனை ஸ்ரீஇராசேஸ்வரி அம்பாள் கோவில் அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகிறது. பத்துத் திங்கள் திருவிழா நடைபெறும்.

---

### மணிஓடர் மோசடி!

[வவுனியா]

கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட மணியோடர்கள் வவுனியாதபால் நிலையத்தில் ஆள்மாருட்டம் செய்துமாற்றப்பட்டிருப்பதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து தவசியாகுளம் என்ற இடத்திலுள்ள எஸ். கணேஸ் என்பவருக்கும் பாரதிபுரம் எம். சிவலிங்கம் என்பவருக்கும் முறையே ரூபா 175.00, ரூபா 2000. 00 பணம் மணியோடரில் அனுப்பப்பட்டதாக தெரிகிறது.

இப்பணத்தை யாரோ மாற்றி மோசடி செய்துள்ளதாக வவுனியா பொலிசாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பியசேன பெரேரா, சார்ஜன்ட் பிரான்சிஸ் ஆகியோர் மோசடி செய்தவர்களை கண்டு பிடிப்பதில் தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

---

### நாவலர் தாசன்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியார்களையும் வரிசையறிந்து தக்கமதிப்புச் செய்தவர் நாவலர் இயலைப் பல்கலைக்கழக மட்டத்தில் ஆராயவைத்தவர். சேக்கிழார்சபை மூலம் செய்தசேவைகளோ அநந்தம், இலங்கையில் முதன்முதலாகத் தமிழ் அறிஞர்கள் வரிசையில் பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம்வழங்கியபோது அது கண்டு உள்ளங்குளிர்ந்து வாழ்த்தியவர் குழந்தை உள்ளம் படைத்தவராய் அன்பு பொறுமை முதலியவற்ருல் எல்லாரது உள்ளங்களையும் கொள்ளை கொண்டவரான ஸ்ரீ காந்தா அவர்கள் ஆற்றிய சைவத் தமிழ்ச் சேவைவரலாற்றில் முக்கிய இடம்பெறும் என்பதிற் சந்தேகமே இல்லை ஸ்ரீகாந்தா அவர்களது பிரிவு தமிழ்பேசும் உலகுக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்'' என்று இலச்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்கின்ருர்.

---

### 'மலையக' கலைநிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

தலவாக்கொல்லை சமூக. கலை, கலாச்சார அபிவிருத்தி அணியினர் 'மலையகக்கலை' நிகழ்ச்சிகளை யாழ்ப்பாணத்தில் நடத்தி வருகின்றனர்.

இம்மாதம் முதலாந் திகதி இவர்கள் தமது நிகழ்ச்சிகளை ஆரம்பித்து 20ந் திகதி வரை நடத்தவுள்ளனர்.

பதின்மூன்று மலையகக் கலைஞர்கள் அங்கம் வகிக்கும் இக்குழுவினர் காமன்கூத்து, கரகம், காவடி, தீப்பந்த விளையாட்டு, பொன்னர் சங்கர் நாட்டிய நாடகம், மலையக இசைக்கருவிகளை இசைத்தல், மலையக எழுச்சிக் கீதங்கள் ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகளையும் நிகழ்த்தவுள்ளனர்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க ஆதரவுடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கல்வி இயக்குனர் திரு. வி. நாகலிங்கம் மேற்படி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகிருர். [கி]

---

### கும்பாபிஷேகம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமியார் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

இக் கும்பாபிஷேக விழாவையொட்டி விஷேட சொற்பொழிவுகளை நெடுந்தீவு இந்து கலாச்சார மன்றத்தினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

'மூவர் கண்டமுருகன்' என்ற பொருளில் வித்துவான் சி. ஆறுமுகம் அவர்களும், காலன் தனக்கு ஒருகாலும் அஞ்சேன் என்ற பொருளில் பண்டிதர் நா. கந்தையா அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள். (கி)

---

### தங்க இரத வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த தேவஸ்தான தைப்பூசத் திருவிழாவும் புதிய தங்கஇரத வெள்ளோட்டமும் இன்று நடைபெறுகின்றன.

புதிய தங்க இரத வெள்ளோட்ட பவனி சட்டநாதர் வீதி, பருத்தித் துறைவீதி, செம்மணி வீதி வழியாக காலை பத்துமணிக்கு தேவஸ்தானத்தை வந்தடையும். (கி)

---

### இளைஞர் நஞ்சுக்கு பலி

(மாவிட்டபுரம்)

தோட்ட வேலையில் கவனம் செலுத்தாத வாலிபரை வீட்டுக்காரர் கண்டித்ததால் மனமுடைந்த அவர் நஞ்சிடம் தஞ்சமடைந்தார்.

பண்டத்தரிப்பைச்சேர்ந்த கந்தையா குமாரசாமி (24 வயது) என்பவரே இம்முடிவுக்குள்ளானவராவார்.

இவர் தோட்ட வேலையில் கவனம் இல்லாமல் வீணே திரிந்து காலத்தைக் கடத்தி வந்தாரெனவும் இதன் காரணமாக வீட்டுக்காரர் இவரைக் கண்டித்து வந்ததாகவும் சம்பவதினமும் இறைக்காமல் எங்கோ சென்றுவிட்டுத் திரும்பிய இவரை வீட்டுக்காரர் கண்டிக்கவே இவர் நஞ்சருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா இம்மரணம் குறித்துவிசாரணை நடத்தி தற்கொலை என தீர்ப்பளித்தார்.

காங்கேசன்துறைபொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

---

### யாழ். திரைப்பட வட்ட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம)

யாழ். திரைப்பட வட்டக் கருத்தரங்கு இன்று காலை யாழ். சிராய்பியடி லேனில் உள்ள ட்ரெக் நிறுவனமண்டபத்தில் நடைபெறும்.

''தமிழ் சினிமாவும் பொன் விழாவும்'' எளற தலைப்பில் திரு. மு. நித்தியானந்தனும், யாழ். திரைப்பட வட்டத்தின் நிகழ்வுகளும் எதிர் பார்க்கைகளும் என்னும் பொருள் பற்றி திரு. அ. யேசுராசாவும் உரையாற்றுவர்.

யாழ் திரைப்பட வட்டம் நிகழ்த்திக் காட்டிய ரஷ்ய, அமெரிக்க. செக்கோஸ்லவாக்கிய. பிரெஞ்சு, ஜெர்மனிய திரைப்படங்கள் பற்றிய சபையோரின் கருத்துப்பரிமாறல்களும் இடம்பெறும். (இ)

---


## எல்லா இடங்களிலும் பலதரப்பட்ட விலை;
## ஆனுல் அம்பலவாணர் அன் சன்ஸ்
## நிறுவனத்தில் நிதானவிலை!

மின்சார உபகரணங்கள் - காகிதாதிகள்,
அலங்கார அன்பளிப்புப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள் - அப்பியாசக் கொப்பிகள்

# அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகளும், மின்சார ஒப்பந்தகாரரும், விற்பனையாளரும்)

**196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(போன் : 8291 தந்தி : ''வாணர்சன்ஸ்''
(கடைத்தெரு பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக)

தலைமையகம் :

## பேர்ள் லைட்ஸ் - அம்பலவாணர் சன்ஸ்

78, மலிபன் வீதி, கொழும்பு 11.
போன் : 24821 — 28244

**லெட்சுமிபவான்,**

97, ஓல்ஹொட்மாவத்த, — — கொழும்பு - 11

மானிப்பாய்

# ப.நோ.கூ.ச. புதிய தலைவர்

(கோண்டாவில்)

மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவு சங்க புதிய தலைவராக திரு. இரத்தினசபாபதி தெரிவு செய்யப்பட்டார்.

சங்க தலைவர் திரு. சு. சிவகுரு தலைமையில் நடந்த கூட்டத்தில் கடந்த தேர்தலில் புதிய தலைவர் பதவிக்கு திரு. க. இரத்தினசபாபதியும். திரு. இ. கே. முதலியாரும் போட்டியிட்டனர் திரு. இரத்தின சபாபதி 4.3 வாக்குகளில் வெற்றிபெற்ருர் உப தலைவராக வி. ஜெயபாலன் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். (க)


கடைசி வாரம்

ஹரன் யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

கமலஹாசன்—ஸ்ரீதேவி

நீல மலர்கள்


## சனசமூகநிலைய கட்டிடத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் கொட்டடி முத்தமிழ் சன்சமூக நிலைய புதிய கட்டிடத்திறப்பு விழா நாளைமாலை நடைபெறுகிறது.

யாழ்.மாநகர தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க ஊழியர் திரு. வே. அப்பையா கட்டிடத்தை திறந்து வைப்பார்.

திரு. ஆ. தர்மலிங்கம் (யாமூர்துரை) தலைமையில் இடம்பெறும் இவ்வைபவத்தில் கோப்பாய் எம்.பி. திரு. மு. ஆலாலசுந்தரம், யாழ் மாநகரசபை உறுப்பினர்கள் திருவாளர்கள் பொ. சண்முகராசா, சீவரத்தின்ம், முன்ஞள் மாநகர துணைமுதல்வர் திரு. சேவியர், திரு. மா. புலேந்திரன், யாழ். மாநகர ஐக்கியதேசியக் கட்சி வேட்பாளர் திரு. கு. சதாசிவம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் ஆர்.ஆர். பூபாலசிங்கம் ஆகியோர் சிறப்பு சொற்பொழிவாற்றுவார்கள். (இ)

இத்தாவில்

## கொலை வழக்கு எதிரிகள் விடுதலை

(சாவகச்சேரி)

இத்தாவில் கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்கு பளை சுற்றுநீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் கொடிகாமத்தைச் சேர்ந்த முருகேசு கணேசமூர்த்தியை இத்தாவிலில் கொலைசெய்ததாக முகமாலையைச் சேர்ந்த க. இரத்தினராசா, த வரதகுமாரன், இ. செல்வராசா ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது,

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி. செல்லத்தம்பு ஆஜராஞர். பொலிஸ் தரப்பில் சார்ஜண்ட் வி. செல்லையா வழக்கை நடத்தினர். (க)

## இடம்மாறும் மின்கம்பங்கள்!

(பண்டத்தரிப்பு)

மின்சாரவிநியோகம் செய்வதற்காக காரைநகர் களபூமிப் பகுதியிலுள்ள விளானை முதலாம் ஒழுங்கைக்கு பறிக்கப்பட்ட மின்கம்பங்கள் இரவோடு இராவாக வேருெரு ஒழுங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நாட்டப்பட்டனவாம். இதுகுறித்து அப்பகுதிமக்கள் வட்டுக்கோட்டை எம், பி. திரு. தா. திருநாவுக்கரசுவின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

இந்த முறைப்பாடுபற்றி விசாரணை நடாத்தும்வரை குறிப்பிட்ட மின்சார விநியோக வேலைகளை உடனடியாக நிறுத்திவைக்குமாறு யாழ். மின்சார சபை பிரதம பொறியியலாளரைவட்டுக்கோட்டை எம். பி. திரு. திருநாவுக்கரசு கேட்டுள்ளார். (க)

## ஆண்டுவிழாவும் இசை விழாவும்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை பாலர் ஞானேதைய சபையின் 35வது ஆண்டு பூர்த்திவிழாவும், இசை விழாவும் இம்மாதம் 6ம், 7ம் திகதிகளில் நடைபெற உள்ளன.

முதல் நாளாகிய 6ம் திகதி காலை நிகழ்ச்சிகள் சிவஸ்ரீ வ. குகசர்மா தலைமையிலும், மாலை நிகழ்ச்சிசள் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி அதிபர் திரு.க.இ. குலசேகரம் தலைமையிலும் நடைபெறும்.

மறுநாள் காலை நிகழ்ச்சிகள் திரு. ச. அம்பிகைபாகன் தலைமையிலும். மாலை நிகழ்ச்சிகள் இலங்கைவங்கி மாவட்ட முகாமையாளர் திரு. கனகரத்தினம் தலைமையிலும் நடைபெற உள்ளது. (க)

# வான் சாரதி தாக்கப்பட்டார்

(மண்டைதீவு)

மண்டைதீவைச் சேர்ந்த வான்சாரதி ஒருவர் யாழ்ப்பாணம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனக்கட்டிடத்துக்கு முன்பாக ஆயுதப்படையினரால் தாக்கப்பட்டதாகவும் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி காவலூர் எம்.பி. கா. பொ. இரத்தினம் வடபகுதி பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. எ. நவரத்தினத்துக்கு அவசரத் தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

# வெளிநாட்டு வேலை ஆசை இளைஞர் நஞ்சுக்குப் பலி

[பண்டத்தரிப்பு]

வெளிநாடு சென்று வேலை வாய்ப்புபெற பெற்ருர் பணம் கொடாததிஞல் மனமுடைந்த இருபது வயது வாலிபர் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் மானிப்பாயில் நடைபெற்றுள்ளது.

மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த சபாபதி ஆனந்தன் என்பவரே இவ்வாறு தன்னுயிரை மாய்த்தவராவர். இவரது மரணவிசாரணை யாழ் அரசினர் வைத்தியசாலையில் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

காலஞ்சென்ற வாலிபர் தமது பெற்ருரிடம் சவுதி அரேபியாவுக்கு வேலைவாய்ப்பு பெற்று போவதற்கு தமக்கு 15 ஆயிரம் ரூபா பணம் தருமாறு கேட்டு வற்புறுத்தியதாகவும், பணம் எதுவும் கைவசம் இல்லாததிஞல் அதற்கு பெற்ருர் மறுப்புத் தெரிவித்ததாகவும், இதனல் மனமுடைந்த அவ்வாலிபர் கிருமிநாசினியை எடுத்து அருந்திவிட்டதாகவும், உடனடியாக யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு அவரை எடுத்துச் சென்றபோது அங்கு அவரின் உயிர் பிரிந்துவிட்டதாகவும் சாட்சியங்கள் மூலம் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் மரண விசாரணை அதிகாரி கிருமிநாசினி அருந்தியதிஞல் ஏற்பட்ட தற்கொலை என்று தீர்ப்பு வழங்கிஞர். [இ]

## அம்புலன்ஸ் படையின் வருடாந்த அணிவகுப்பு

[பண்டத்தரிப்பு]

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை யாழ். மாவட்ட பிரிவின் வருடாந்த அணிவகுப்பும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் மார்ச் மாதம் 3ம் திகதி யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதன் கலந்துகொண்டு முதலுதவிப் பயிற்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கான சான்றிதழ்களை வழங்குவார். கொழும்பிலுள்ள சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் பிரதம கமாண்டர் டாக்டர் எப். ஒஸ்வின் பெர்ஞண்டோ இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வார். இதற்கான ஒழுங்குகளை சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்ஞசித்தம்பி மேற்கொண்டுள்ளார். [இ]

# ஒத்திவைத்த 5 வருட சிறை

[யாழ்ப்பாணம்]

கடைஉடைத்தது; களவெடுத்தது; சாமான்கள் வைத்திருந்தது ஆகிய மூன்று குற்றங்களையும் ஒப்புக்கொண்ட மூவருக்கு, ஒவ்வொரு குற்றத்துக்கும் தலா 12 மாதம் வீதம் 5 வருஷங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையை யாழ். நீதிமன்ற நீதவான் ரி. ஜோகநாதன் விதித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பி. முத்தையா என்பவருக்குச் சொந்தமான கடையை என் முனீஸ்வரன், கே. கமலநாதன், என். திருச்செல்வம் ஆகிய மூவரும் உடைத்து கொள்ளை அடித்ததாக யாழ். பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவர்களின் கையடையாளங்களைப் பதிவுசெய்யும்படி உத்தரவிட்ட நீதவான் மேற்குறிப்பிட்ட தண்டனையை விதித்து தீர்ப்பளித்தார். [மா]

மினி பஸ் விபத்து:

# மரண வழக்கு எதிரி விடுதலை

(சாவகச்சேரி)

'மினிபஸ்' விபத்து மரண வழக்கில் எதிரி விடுதலைசெய்யப்பட்டார். இவ்வழக்கு பளை சுற்று நீதின்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பா முன்னிலையில் நடைபெற்றது.

வவனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மினிபஸ், இத்தாவிலுக்கு அருகில் இனந்தெரியாத பெண்ணை மோதிய சம்பவம் தொடர்பாக, மினிபஸ் சாரதி க. சின்னையாவுக்கு எதிராகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கை, சாரதிக்கு எதிராக நடத்தப் போதிய ஆதாரம் இல்லையெனப் பொலிஸ் சார்ஜன்ட் செல்லையா தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரியை விடுதலைசெய்தார். (க)

# "கூட்டுறவுத்துறையில் மக்கள் நம்பிக்கை"

(கோண்டாவில்)

"நான் எதிர்பார்த்ததைவிட கூடுதலான முன்னேற்றத்தை இச்சங்கம் பெற்றுள்ளது. இந்நிலை வருவதற்குக் காரணம், மக்களுக்குக் கூட்டுறவு அடிப்படையில் நல்ல சேவையை ஆற்றியதே. கூட்டுறவுத்துறையில் மக்கள் கூடிய நம்பிக்கையும், மதிப்பும் உடையவர்களாக இருக்கவேண்டும்" என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்,

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில். யாழ். தேசியக் கூட்டுறவுச் சபையினல் வளர்ந்தோருக்கான போஷாக்குக் கல்வித் திட்டப் பயிற்சிக் கருத்தரங்கு மகளிர் சங்கத் தலைவர் திரு. ந. அருணசலம் தலைமையில் நடாத்தப்பட்டது. இக்கருத்தரங்கு, கல்வி அமைச்சின் வளர்ந்தோர் கல்விப் பிரிவுடனும், திட்ட அமுலாக்கல் அமைச்சின் போஷாக்குப் பிரிவுடனும் சேர்ந்து நடாத்தப்பட்டது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தமது உரையில் "இச்சங்கம் நாளுப் பொழுதும் வளர்ச்சி அடைந்துவருவது பாராட்டத்தக்கது" என்ருர்.

மகளிர் குழுத் தலைவி திருமதி மனேன்மணி சண்முகதாஸ், டாக்டர் ந-ராசா ஆகியோரும் உரையாற்றினர்.


Regal Cinema (Jaffna) Tele. 360.
தினசரி 10—30, 2—15, 4—30, 7—00, 9—30
Warlords of Atlantic

12-2-82 முதல்
தனிமரம்

8-2-82 வரை மட்டும்
மனேகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
142 வது!! வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி
குரு
அநேகரின் வேண்டுதலுக்காக சில தினங்கள் மட்டும்!

Rajah JAFFNA
LOVE BUG'S RETURNS
Daily 10—30, 2—00, 4—30, 7—30. 9—30
WALT DISNEY Presents
HERBIE GOES TO MONTECARLO
(Color by Technic
For School Children Contact Management

WINDSOR (JAFFNA)
Daily 5 Shows
Grand Gala Release
'Airport '80 – The Concorde'
Starring : Alain Delon. George Kennedy Susan Blakely.
இரு மடங்கு ஒலி வேகத்தில் செல்லும் 'கொங்கோட்' விமானம் பாரிஸ் நகரத்திற்குத் தனது கன்னிப் பயணத்தைத் தொடங்குகின்றது. அதிவிசேஷ பயிற்சி, அனுபவம், ஆற்றல் மிக்க விமானிகள் அதைச் செலுத்துகின்ருர்கள். திடீர் தாக்குதலினல் பிரயாணிகளின் உயிர்கள் ஊசலாடுகின்றன. விமானிகள் எப்படி இதைச் சமாளிக்கின்ருர்கள் என்பதை வெண்திரையில் காண்க.


போயா தினத்தையொட்டி இன்றுசினிமாகாட்சிகளில்லை


நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

110, கஸ்தூரியார் ரோட், போன்: 7199.

யாழ்ப்பாணம் தந்தி: வைரம்.

# வரி விளம்பரம்


## விற்பனைக்கு

பனை, இயக்கச்சியில் 68½ ஏக்கர் தென்னந்தோட்டம் இரு பிரிவுகளாக 50உம், 18½உம் உண்டு. LRCயினுல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இளம் தென்னம்பிள்ளைகள் காய்க்கத் தொடங்கிவிட்டன. கல்வீடும் உள்ளது. வாகனங்கள் செல்ல தார் ரோட்டு கண்டி வீதிக்கு அண்மையில் அமைந்துள்ளது. தொடர்பு; 65, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். 2093

கண்டி வீதி—கைதடிச் சந்தியிலிருந்து முந்நூறு யார் தொலைவில் மானிப்பாய் வீதியில் மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. இலக்கம்: 1593, 'ஈழநாடு' மே. பா. யாழ்ப்பாணம். 2048

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் பிரபல நகைக்கடைகளின் மத்தியில் 2 பரப்புடனும், 2 கடைகளுடனும் காணி விற்பனைக்குண்டு. தயவுசெய்து நேரடித் தொடர்பு கொள்ளவும். ஞானசுந்தரம், 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 2220

நல்ல நிலையில் உள்ள 9ஸ்ரீ தொடர்பிலக்க பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 7, நிக்கலஸ் லேன், கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி. 2179

சாவகச்சேரி இந்துக்கல்லூரி சங்கத்தானைப் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. அ. பரமநாதன், 38, சிவப்பிரகாசம் ரோட், யாழ்ப்பாணம். 2194

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## விற்பனைக்கு

மிக மலிவான விலையில் 41 அடி நீளம், 10 அடி அகலமான முடியுந் தறுவாயிலுள்ள மரவள்ளம் (வெற்றுக் கொட்டு) விற்பனைக்குண்டு, பிரயாணிகள் பொதிகள் போக்குவரத்துச் சேவைக்கும் இழுவைக் கப்பலுக்கும் (Trawler) உகந்தது பாவித்த 72 H. P. "சீ பவர்" என்ஜினும் உண்டு. கடிதத் தொடர்பு: "திருமதி குகப்பிரதாசன், சிவன்கோவில் மேற்கு, வல்வெட்டித்துறை". பார்வையிடல்: சனி, ஞாயிறு மாத்திரம். 176

யாழ்ப்பாணக் கச்சேரிக்குச் சமீபத்தில் கண்டி ரோட்டில், பெந்தேகோஸ் சபைக்குப் பக்கத்தில் கிணற்றுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க. திருமதி புறாடி, 4. புறாடி ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம். 2197

யாழ்ப்பாணம் மாட்டீன் ரோட் லேனில் 1½ பரப்பில், நன்னீர்க் கிணற்றுடன், நான்கு அறைகள் கொண்ட வீடு. விலை 5½ லட்சத்திற்கு மேல் விண்ணப்பிக்க. விளம்பர இல. 2181 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2181


## தேவை

நவீன முறையில் அமையப்பெற்ற சைவ ஹோட்டலுக்கு சகல ஊழியர்களும் தேவை. 8—2—82க்கு முன் நேரில் சமுகம் அளிக்கவும். ஸ்ரீ அம்பாள் சைவ ஹோட்டல் அன்ட் பேக்கரி, ஸ்டேசன் வீதி, மாங்குளம். 2137

## பயிற்சி

றேடியோ - டெலிவிசன் (செய்முறைப் பயிற்சிகளுடன்) Hotel Management பயிற்சி ஜேர்மன், பிரஞ்சு மொழி வகுப்புக்களும் ஆரம்பம். 10-02-82 அனைவரும்சேரலாம். விபரங்களுக்கு நேரில் வரவும். நாஷனல்அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2187

## கண்ணீர் அஞ்சலி!



தமிழ்மக்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் பெற்றிருந்த பெரியார் ஸ்ரீகாந்தா, யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடக் கட்டடம் சிறந்த முறையில் அமையவேண்டும் என்பதில் எமக்கு அளித்த ஒத்துழைப்பும் ஆலோசனையும் மறக்க முடியாதது. தள்ளாத வயதிலும் சிரமத்தைப் பாராது நேரத்தைப் பொருட்படுத்தாது எமக்கு உற்சாகமூட்டியஇப்பெருமகனர், இக் கட்டடத் திறப்பு விழாவின்போது எம்முடன் இல்லையே என்று எண்ணும் போது நெஞ்சம் விம்முகிறது. சிவ தொண்டின் சின்னமாக விளங்கிய இப் பெரியாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

மனோகரன் அன்ட் வெற்றிவேல்
(கட்டட ஒப்பந்தகாரர்கள்)
53 (31), கண்டிவீதி, யாழ்ப்பாணம்.
கிளை:
11c, மொம்ஸக் கட்டடம்,
ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
2213


# யாழ். பொதுசன நூலகம் மேயர் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

இன்று அடிக்கல் நாட்டப்படும் யாழ். பொதுசன நூலகத்துக்கு 1 கோடியே 50 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உந்நத நோக்கத்துக்கு தங்களால் இயலக்கூடிய ஆகக்கூடுதலான தொகைப் பணத்தை உதவுமாறு யாழ். மேயர் திரு. இராசா விசுவநாதன் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தமது வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

97,000 புத்தகங்களையும் கிடைத்தற்கரிய கையெழுத்துப் பிரதிகளையும் கொண்ட ஒரு சேர்வை உள்ளடக்கிய ஒரு மகத்துவம் மிக்க கட்டிடமான யாழ். பொதுசன நூல் நிலையத்துக்கு மனம் போனவாறுக நிகழ்த்தப்பட்ட அழிவே ஒருகால் இத்தீவின் வரலாற்றில் இடம்பெற்ற மிகுந்த அவமானத்துக்குரிய சோக நிகழ்வாக இருக்கலாம்.

ஜூன் முதல் வாரத்தின் போது நகரத்தை எரிமூட்டுதலுக்கும், தாக்குதலுக்கும் உட்படுத்திய சட்டத்தினதும் ஒழுங்கினதும் பாதுகாவலர்களால் அது எண்ணித் துணிந்து மேற்கொள்ளப்பட்டதொன்று என்பதால் அச்சோகம் எல்லை கடந்ததொன்ருகின்றது.

வழிவழி மகத்துவமும் கீர்த்தியும் மிக்க அறிஞர் அரசறிஞர் மற்றும் தெய்வத்தன்மை பொருந்திய பெரியார்கள் வரிசைக்கா அப்பெருமை சேரும்படியாக இலங்கைத் தமிழர்களுக்கு ஆத்மீக அறிவு பெட்டகமாக யாழ்ப்பாணம் புகழுடன் விளங்கி வருவது கண்டு அறியப்பட்டதே சிரஞ்சீவிகளாக புகழுடம்பு எய்திய பல்லோருள்ளும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கலைஞானி ஆனந்தக்குமாரசாமி ஞானப்பிரகாச அடிகளார் பிரபுத் துவபொன்னம்பலம் சகோதரர்கள் தமிழ் தேசிய தலைவர்களான அமரர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் சிவயோகர் சுவாமிகள் ஆகியோரின் பெயர்கள் முன்னணியில் நிற்கின்றன.

இந்தப் பாரம்பரியத்துக்கு ஏற்புடையதான ஓர் உன்னத தோற்றத்தை யாழ் பொதுசன நூல் நிலையம் தனது ஐம்பதாண்டு கால வரலாற்றில் எய்தியிருந்தது. அக்கருத்துக்கான விவாத விடயத்தை பயனுள்ள முறையில் ஆரம்பித்து வைத்த கே. என். செல்லப்பா சபை அங்கீகாரத்துடன் கட்டிடத்திட்டத்தை துணிவுடன் மேற்கொண்ட யாழ்ப்பாணத்தின் முதலாவது மாநகர முதல்வர் சாம் ஏ. சபாபதி நிதிகளைச் சேர்ப்பதற்காக திரைகடல் கடந்த அருள்திருத் தந்தை ஜே. எம். எவ். லோங் ஆகிய பெரியார்களையும் திட்டத்தை நிறைவு செய்வதற்கு கணிசமாக உதவிய இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஆகிய நிறுவனங்களையும்

(8ம் பக்கம் பார்க்க)


## கேள்விப் பத்திரம்

பனங்காமம் பற்று பல நோ. கூ. சங்கம் கீழ்க்காட்டப்பட்ட பொருட்களை தனித்தனி கேள்விப்பத்திரமூலம் விற்பனை செய்ய இருக்கின்றது. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக ரூபா 100/-ம் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 25/-ம் செலுத்தி 15.2.82க்கு முன் கிடைக்கக்கூடியதாக செயலாளர், பனங்காமம் பற்று பல நோ. கூ. சங்கம் வவுனிக்குளம் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைத்தல்வேண்டும். பொருட்களை பார்வையிட விரும்புவோர் 9.2.82 முதல் 12.2.82 வரை பார்வையிடலாம்.

(1) வெற்றுச்சாக்குகள் 2765
(2) 45 கலன் வெற்றுத் தகரங்கள் 40

இங்ஙனம்
செயலாளர்
பனங்காமம் பற்று
ப. நோ. கூ. ச.
வவுனிக்குளம்,
7.2.82. 2217


## பாருக்குள்ளே

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பாலசரஸ்வதியின் கலைஞானம் மிகுந்த ஆடலும் மக்கள் மத்தியில் இக்கலைமீது நாட்டத்தை ஏற்படுத்தியது மற்றும் குமாரிகமலா, மிர்ளுளினி சாராபாய், வைஜந்திமாலா போன்றவர்கள் மக்கள் மத்தியில் இக்கலைக்கு செல்வாக்கை ஏற்படுத்தினுர்கள்.

பரத நாட்டியத்தைப் போலவே ஏனைய சாஸ்தூரிய நடனங்களும் சிலரின் அர்ப்பணிக்க பணியில் புத்துயிரடைந்தன. கதக்நடனத்திலே அந்தவகையில் மடம் மேனகா குறிப்பிடத்தக்கவர். அவரது முயற்சியால் பூவையர் சகோதரிகள், சித்திரா தேவி, ரோஷன் குமாரி போன்ற சிறந்த பல கலைஞர்கள் தோன்றினுர்கள். இப்போது பிரசித்தம்பெற்றுவிளங்கும் பிர்ஜூ மகராஜின் முன்னேர்களானலஜ்ஜூ மகாராஜ் ஷம்பு மகராஜ், ஆஷான் மகராஜ், கல்கா பின்டாடின் மகராஜ் ஆகியோரின் பங்களிப்பும் பெருமளவிலானது

மணிப்பூரில் நடனம் நாளாந்த வாழ்வின் ஓர் அம்சமாகும். மத, சமூக ரீதியாக வலுவான ஒரு சம்பிரதாயத்தை அது கொண்டிருந்தது, சிங்ஹ, அமோடான் ஷர்மா போன்ற மேதைகளோடு இளைய தலைமுறையினரும் சிலர் மணிப்பூரைச் சாராதவர்களுக்கும் மணிப்புரி நடனத்தைக் கற்பித்து ஒரு பரவலான அங்கீகாரத்தை அந் நடனத்துக்கு பெற்றுக் கொடுத்தார்கள் ஜாவேரி சகோதரிகள் இந்தியா முழுவதும் தமது நிகழ்ச்சிகளை நடத்தினுர்கள்

ஒடிஸி நடனத்தை ஆலயங்கன்லிருந்து பொதுமேடைக்கு கொணர்ந்தவர் இந்திராணி ரஹ்மான். சுதந்திரத்துக்குப் பின்னர்தான் உண்மையில் இந்நடனம்பற்றி ஒரு திட்டமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சன்யுக்தா பாணிக்ரஹி இக்கலையை பிரபல்யப்படுத்தியவர்களில் முக்கியமானவர். மற்றும் கும் கும் தாஸ், ஒரிஸா மாநிலத்தவரல்லாதோரான பொனுல் மான் சிங்ஹ், கும்கும் லால், யாமினி கிருஷ்ணமூர்த்தி போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

கதகளி நடனம் பொதுவாக ஆண்களால் மாத்திரமே ஆடப்பட்டு வந்தது. மிடுக்கான அதன் ஆடல் முறையினுல் ஆண்களே பெண்பாத்திர மேற்று ஆடிவந்த போது குரு கோபிநாத்தின் மனைவி தங்கமணி, காந்தாராவ் மிருணுளினி சராபாய். ரஜினிதேவி ஆகியோர் இக்கலையில் ஈடுபட்டு பிரபல்யத்தைப்பெற்றுர்கள், கனக்ரேலே, தாரா, ராஜ்குமார் போன்றவர்கள் இளையதலைமுறையினருள் குறிப்பிடத்தக்கவர்கள் கோபிநாத் கதகளி ஆடல் முறையிலே ஒரு தனித்துவத்தை ஏற்படுத்தினுர்.

(தொடரு

## நந்தாவில்

(2ம் பக்கத் தொடர்ச்சி

வழிபடல்வேண்டும். சுத்தமான அறிவுகொண்டு வணங்கினுல் மூலஸ்தானத்தில் இருக்கும் தெய்வத்தின் திருவருள் கிடைக்குமெனப் பெரியோர்கள் கூறுவார்கள். ஆலயத்தில் விசுவரூபமாக அமைந்துள்ள இராஜகோபுரம், ஆலய வழிபாட்டுக்கு ஒரு வழிகாட்டியாக அமைவதால் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்று நமது முன்னேர்கள் கூறினுர்கள் போலும். இத்தகைய இராஜகோபுரத்துக்குக் கும்பாபிஷேகம ஒரு முக்கியமான கிரியையாகும். தெய்வீக சம்பத்துக்கள் பொருந்திய ஸ்தபதியாரும், தெய்வீகக் கலை வல்லவர்களான சிற்பிகளும் திட்டப்படி அமைத்த இந்த ஸ்தூலலிங்கமாகிய கோபுரத்துக்குத் தெய்வீக சக்தியை உண்டாக்கவே கும்பாபிஷேகம் நடக்கின்றது. யாகசாலையில் உச்சரிக்கும் வேத மந்திரங்களின் மூலமாக; நீர் நிரம்பிய கலசங்களில் அந்தணர்களின் வாக்குச் சக்தி மூலமாகவும், ஜபம், தியானம் மூலமாகவும் தெய்வீகசக்தி பாய்ச்சப்படுகின்றது. அத்தகைய கலசங்களால் தெய்வாம்சப் பொருந்திய குருக்கள்மாரால் கும்பாபிஷேகம் நடக்கும் பொழுது தெய்வீக சக்தி பொருந்தியதாக ஸ்தூலலிங்கமாகிய இராஜ கோபுரமும் விளங்குகின்றது.

## கசூரிணா

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மற்ற கடற்கரையும் அமெரிக்கன் மிஷனரிமாரை பெரிதும் கவர்ந்திருந்தன. அவர்களே இந்த இடத்திற்கு கசோரிணு என்று பெயர் சூட்டினர். அப்பெயர் இன்றுவரை பாவனையிலிருந்துவருகிறது. இந்தப் பாசறை அமைப்பதற்கு நாற்பத்தையாயிரம் ரூபா தேவைப்பட்டது. இதனைக் கிறிஸ்தவ கல்லூரிப் பேரவையினர் தமது ஊக்கமான உழைப்பின் மூலம் சேகரித்து வழங்கினர்.

### திறப்பு விழா

வேலை ஆரம்பித்த ஒரு வருடகாலத்திற்குள்ளேயே இதன் கட்டிட வேலைகள் யாவும் பூர்த்தியாயின, பரி.யோவான் கல்லூரியின் மதகுரு அருட்திரு. ஜேம்ஸ் இரத்தினநாயகம் அடிகளாரின் வழிபாட்டினைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னுள் அதிபர் அருட்திரு எஸ், கே. பங்கர் அடிகளார் இதனைச் சம்பிரதாயமாகத் திறந்து வைத்தார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள பல ஸ்தாபனங்கள் தமது வருடாந்த பாசறைகளையும், ஞான ஒடுக்கங்களையும், தியானங்களையும் இந்த அமைதியான இடத்தில் நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும், வெள்ளிவிழாக் காணும் இப் பாசறை மென்மேலும் தொடர்ந்து யாழ்ப்பாண வாலிபர் சமுதாயத்திற்குத் தொடர்ந்தும் தொண்டாற்றிப் பொன் விழாவையும், வைர விழாவையும் காண வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

தொகுப்பு
**எஸ். பி. ஜீவானந்தம்**

## தவறணையிலிருந்து திரும்பியவர் கல்லால் அடித்து கொலை!

[ஊர்காவற்றுறை வேலணை நிருபர்கள்)

இரவு எட்டு மணியளவில் கள்ளுத்தவறணையில் கள் அருந்திவிட்டு வீடுதிரும்பியவர் கல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

சரவணை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகசபை செல்லையா[வயது58] என்பவர் இரவு எட்டு மணியளவில் கள்ளுத் தவறணையில் கள் அருந்திவிட்டு குறுக்குப்பாதையால் வீட்டுக்குவரும்போது இனந் தெரியாத நபர்கள் இவரை அடித்து நிலத்தில் வீழ்த்திய பின்னர் பெரிய பாறுங்கல்லால் முகத்திலும் தலையிலும் அடித்துக் கொலை செய்துள்ளனர். இவரது தலை இரண்டாகப் பிளக்கப்பட்டுள்ளது.

இக் கொலை சம்பந்தமாக ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய அதிகாரி சுப்பிரமணியம் குகதாசன் பிரேத பரிசோதனை செய்தார். ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ரி. கே. என். திலகன் மரணவிசாரணை செய்தபின்னர் கொலை எனத் தீர்ப்பளித்தார். ஊர்காவற்றுறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். பி, பத்தேவல, சார்ஜன்ட் கே. சிவகுரு ஆகியோர் தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை எவரும் கைதாகவில்லை. [அ]

மட்டக்களப்பிலிருந்து விளையாடவந்த

# 17 உதைபந்தாட்ட வீரர் யாழ். ஆஸ்பத்திரியில்!

--நமது நிருபர் இரா. உதயகுமார்--

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெறவிருந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்வதற்காக இங்கு வந்த மட்டக்களப்புக் கோஷ்டி வீரர்கள் 23பேரில் 17 பேர் திடீர் மயக்கமுற்றதால் யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுர்கள். இதனுல் போட்டி நடைபெறவில்லை.

நேற்றுமாலை யாழ் மாவட்டக் கோஷ்டியுடன் இரண்டாம் தடவை மோதவந்த இக் கோஷ்டியினர் திடீர் மயக்கம் போட்டு விழுந்தனர்.

மயக்கமடைந்தவர்கள் உடனடியாகவே யாழ். ஆஸ் பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்களை யாழ். மாவட்ட அபிவிருத்திசபை செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா உட்பட பல அரசாங்க உயர் அதிகாரிகள் நேற்று மாலை சென்று பார்வையிட்டனர்.

இது இவ்வாறிருக்கநேற்றுப் பிற்பகல் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியைப் பார்ப்பதற்கு ஏராளமான ரசிகர்கள் யாழ். விளையாட்டரங்கில் கூடியிருந்ததுடன் மத்தியஸ்தர்களும் மைதானத்தில் இறங்கிவிட்டனர். இறுதியில் இவ்விடயம் அறிவிக்கப்பட்டதையடுத்து போட்டி ஒத்திவைக்கப்பட்டு ரசிகர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

## இன்று

(யாழப்பாணம்)

பனை அபிவிருத்திச்சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையம் யாழ். நகரில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

### விரைவில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மருத்துவ பீடத்தின் 1வது கட்டத்திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய உயர் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் எவ். எஸ். சி. பி. கல்பகே உறுதியளித்துள்ளார்,

யாழ். பல்கலைக்கழகப்பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நேற்று நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் கல்பகே மேலும் பேசுகையில் கூயதாவது:

' யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்னைகள் நியாயமானது இப்பிரச்னை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்,

யாழ்ப்பாணத்தில் கூடிய மாணவர்கள் மேலும் தெரிவு செய்யப்படுவதற்கு ஒழுங்கு செய்வேன் என்றும் அவர் தெரிவித்தார். (மா)

### 4 மாணவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டச் சென்ற எவருக்குமே நீந்தத் தெரியாதென்று கூறப்படுகிறது. 4 மாணவரின் சடலங்களும் மீட்கப்பட்டு, சந்திரா டேவிட், வாசுதேவன், மனோரஞ்சிதன், சுரேஸ் என அடையாளம் காணப்பட்டன. (க)

மோட்டார் உதிரிப்பாகக் கொள்ளை:

## ஒருவர் குற்றத்தை ஏற்ருர்; மற்ற 5பேரும் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கராஜிலுள்ள உதிரிப்பாகங்களைக்களவாடியதாகப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட 6 பேர் யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவரான விநாயகமூர்த்தி அரசநாயகம் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதவான் இவரை இம்மாதம் 19ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படியும் கைவிரலடையாளங்களைப்பதிவு செய்யும்படியும் உத்தரவிட்டு மற்றைய 5 சந்தேகநபர்களையும் விடுதலை செய்தார்.

யாழ்ப்பாணம் நாவலர் ருேட்டிலுள்ள பி. தனபாலசிங்கம் என்பவரின் கராஜிலிருந்து 9,350 ரூபா பெறுமதியான மோட்டார் உதிரிப்பாகங்களை களவாடியதாக தாக இவர்களை யாழ். பொலிசார் கைது செய்திருநதனர். (மா)

## முல்லைத்தீவு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கி வைத்துப் பேசிய பிரதேச அபிவிருத்தி, இந்து சமய விவகார அமைச்சர் திரு. செ. இராசதுரை கூறினுர்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. ஞானச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் திரு. எ. ஆர். மன்சூரும் கலந்துகொண்டார்.

இவ்விழாவிற்கு துணுக்காய் பாண்டியன்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலிருந்து ஆசிரியர்கள், மாணவர்கள், அரசாங்க, கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் வந்திருந்தனர்.

அமைச்சர் திரு. இராசதுரையுடன் அமைச்சின் செயலாளர் திரு. ஜெகநாதனும் வந்திருந்தார். அமைச்சர் திரு. இராசதுரை, மின்சார பொத்தினை அமுக்கி முல்லைத்தீவு மாவட்டத்தின் மின்னெளியை 'ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் ''எனது அமைச்சு சகல இன மக்களுக்கும் சிறந்த சேவையைச்செய்து வருகின்றது. குறிப்பாகத் தமிழ் பேசும் மக்கள் வாழ் பிரதேசங்களான மன்னரில குழாய்க்கிணறுகள், மீன்பதனிடும் நிலையங்களும் வவனியாவில் கைத்தொழில் நிலையங்களும் ஆரம்பித்துள்ளது'' என்றுர்.

## அரசுடன் பேச்சுவார்த்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமை சிதற இடமளிக்காது நடந்துகொள்ள வேண்டும்.

### இளைஞர்களைப் பிரிக்கத்திட்டம்

விடுதலை இயக்கத்திலிருந்து இளைஞர் அணியைப் பிரிக்க சிலர் திட்டமிட்டு செயல்படுகின்றுர்கள், எமக்கு விரோதமாக அவர்களை திசைதிருப்ப முயல்கிறுர்கள். நானும் 20 வயது இளைஞனுக அரசியலில் பிரவேசித்தவன். நான் அசியலில் பிரவேசித்தபோது இன்றைய இளைஞர்கள் பிறந்திருக்கமாட்டார்கள். அன்று முதல் இன்றுவரை ஒரே இயக்கத்தில் ஒரே இலட்சயத்துடன் செயல்பட்டு வருகிறேன்.

### பொலிசாரின் கொலையுடன் இணைத்து பிரசாரம்

விடுதலைப் பாதையில் சரியான சூழ்நிலைகளை அனுசரித்து அதற்கமைய செயல்பட்டு வருகிறேம். ஆனுல் அண்மையில் நடந்த ஒரு வாலிபரது கொலையுடன் எமது இயக்கத்தைச் சம்பந்தபடுத்திச் சிலர் பிரசாரம்செய்கின்றனர். இது எமது இனத்தையே பூண்டோடு அழிக்க வழிவகுப்பது போன்ற முயற்சியாகும். இதனை மக்கள் ஒருபோதும் நம்பிவிடக்கூடாது. தூய்மையான உள்ளத்துடன் செயல்படுபவர்கள் யார் என்பதை தமிழ் மக்கள் மட்டுமல்ல இளைஞர்களும் அறிவார்கள்

அரசாங்கத்துக்கு நாம் சமர்ப்பித்த 5 அம்சக் கோரிக்கை நிறைவேற்றப்படுமுன் பாராளுமன்றம் சென்றுவிட்டோம என்று கூடக் குறை கூறுகிறுர்கள். அரசிடம் விடுத்த கோரிச்கைகளுக்கு நல்ல பலனை கிடைத்துள்ளது. வடக்கு, கிழக்கிற்கு 75 வீதம் தமிழ் பொலிசார் வேண்டும் என்று கேட்டோம். ஆனுல் அவ்வாறு நியமிக்க போதிய தமிழ் பொலிசார் இல்லை. முன்னர் 5 வீதம் கூட தமிழ் பொலிசார் இங்கு இருக்கவில்லை. ஆனுல் இன்று 40 வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர். விரைவில் 75 வீத நியமனம் கிடைக்கும். ஊர்காவல் படை மே மாதத்தில் இயங்க இருக்கிறது.

வன்செயலில் ஈடுபட்ட 13 பொலிசார் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. யாழ். பொலிசில் கடமை புரிந்த 189 பேர் பொலிஸ் இலாகா விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். நஷ்டஈடு வழங்குவதற்கு குழு நியமிக்கப்பட்டு விரைவில் அது கிடைககலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச விசாரணைக் கமிஷன் நியமிக்க அரசு மறுத்தது. ஆனுல் சர்வதேச ஜூரர் சபை வன்செயல் பற்றி விசாரித்து 88 பக்க அறிக்கையை ஜெனியாவில் வெளியிட்டு அரசுக்கும் அனுப்பி வைத்துள்ளது. அதற்கு அரசு அளிக்கும் பதிலை எதிர்பார்த்திருக்கிறேம்.

### பகிஷ்கரிப்பை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது.

மாணவர்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்த மானிய ஆணைக்குழுத் தலைவர் மாணவர்களது கோரிக்கை நியாயமானது எனவும் அவர்களுக்கு எதிராகத் தம்மால் வாதாட முடியவில்லை எனவும் தெரிவித்து எதிர்வரும் 11-ந் திகதி கூட்டப்படவிருக்கும் மானிய ஆணைக்குழுக் கூட்டத்தில் இது பற்றி பிரஸ்தாபித்து மாணவர்களுக்குச் சாதகமான முடிவினை பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

மேற்படி உறுதியையடுத்து தற்போது இவர்கள் மேற்கொண்டு வரும் பகிஷ்கரிப்பைக் கைவிடுவதா, இல்லையா என்பது பற்றி முடிவு செய்வதற்காக வணிக மாணவர் மன்ற செயற்குழு நாளை திங்கட்கிழமை காலை கூட்டுகின்றது.

### யாழ். பொதுசன...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பயபக்தியுடனும் நன்றியறிதலுடனும் நினைவுகூருகின்றுர்கள்.

#### பண்பாட்டுக் கொலை

பண்பாட்டுக்கொலையானஇக் காட்டுமிராண்டி நடவடிக்கை குறித்து நாகரிக உலகுடன் சேர்ந்து நாமும் வருந்துகின்ற அதேவேளையில் ஒப்பிடமுடியாத இந்த வரலாற்றுச்சின்னத்தை மீள்விப்பதில் நாம் காலத்தை விரயமாக்கக் கூடாது. ஆகவே நண்பர்கள் அனுதாபிகளிடமிருந்து நிதிகளுக்கான ஒரு வேண்டுகோளை நாம் வெள்ளோட்டம் விடுகிறேம் என்பதுடன் எமது முயற்சிகளில் நீங்கள் அனுதாபமுடையவர்களாக இருக்கிறீர்கள் என்பதில் நம்பிக்கையுடையவர்களாகவும் உள்ளோம்.

சிறப்பான வசதிகளுடனும் மேலும் விசாலமான இடவசதிகளுடனும் ஒரு நவீன நூல்நிலையத்தை மீள அமைப்பதெனத் துணிந்துள்ளோம்.

யாழ்ப்பாண இலங்கை வங்கியில், 'யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலைய நம்பிக்கை நிதி—2893'ம் எண் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமக்கு அறிவித்துத் தங்கள் உதவு தொகைகளை வங்கிக்கே நேரடியாக அனுப்பிவைப்பீர்களானுல் நன்றி பாராட்டுவோம்.

#### நன்கொடை வழங்கியோர்

யாழ்ப்பாணம் நூலகத்துக்கு ரொக்கத் தொகைகள் நல்கியோர் விபரம் வருமாறு:

1, யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை ரூ 300,000.00

2. கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் யாழ்ப்பாணம் (உலகத் திருச்சபைகளிடம் பெறப்பட்டது) ரூ. 150,000.00

3. மேற்கு ஜெர்மன் நொய்ஸ் நகர் தமிழர் ரூ. 86,852,71

4. யாழ்ப்பாணம் முதல்வர் இராஜா விசுவநாதன் ரூ. 23,312,30

5, இ. நடராசா, 29. கொழும்புத்துறை வீதி. யாழ்ப்பாணம். ரூ, 15,000.00

6. இலங்கை ஜாதிக சர்வோதய சங்கத் தலைவர் ஏ. ஆரியரத்தின ரூ. 10,000.00

7. மேற்த ஜெர்மன் தமிழர் பீ. அகஸ்ரின் மூலம் ரூ. 7,206.00

8. குருநாகல் சைவ மகா சபை ரூ. 6, 290.00

9. அ.யோ. செல்வநாயகம் மாநகரசபை உறுப்பினர் ரூ. 5, 850. 00.

10. எஸ். தியாகராசா, மாநகரசபை உறுப்பினர் ரூ. 5,400.00.

11. சுபாஸ் விடுதி உரிமையாளர் ஏ. சங்கரன் ரூ.5, 001.00.

12. வி.சிவசுப்பிரமணியம் மூலம், நைஜீரியாவாழ் தமிழர் ரூ. 3,581.80.

13. திருமதி அ. சுவாமிநாதன், மாநகரசபை உறுப்பினர் ரூ.3,000.00.

14. செ.குமாரவேல், மாநகர சபை உறுபபினர் ரூ.2701.00.

15. அபுதாபியில் இருந்து பெயர் குறிப்பிடவிரும்பாத தமிழர் ஒருவர் ரூ. 2,000.00. [இ]

## வயோதிபர் கடலுக்கு பலி

(ஊர்காவற்றுறை)

காரைநகர் வேரப்பிட்டியைசேர்ந்த நாகமுத்து செல்லையா (வயது 60) என்பவர் கிடுகு வாங்குவதற்காகத் தனியாக கட்டுமரமொன்றில் ஊர்காவற்றுறைக்கு வந்து கிடுகு வாங்கிக் கொண்டு காரைநகருக்குத் திரும்பும் போது கட்டுமரம் கவிழ்ந்ததால் கடலுக்குப் பலியானுர். இச்சம்பவம் கடந்த 31ம் திகதிநடைபெற்றது.

இவரது சடலமும் கட்டுமரமும் அடுத்தநாள் ஊர்காவற்றுறைக் கடற்கோட்டையிலிருந்து 300யார் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை செய்தார். ஊர்காவற்றுறை மரணவிசாரணை அதிகாரி திரு. மு. சி. திருநாவுக்கரசு மரணவிசாரணை நடத்தினுர். இறுதியில் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

### சங்காபிஷேகமும் லட்சார்ச்சனையும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் நாளை திங்கட்கிழமை பகல் சங்காபிஷேகம் நடைபெறும். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணி தொடக்கம் ஏகதினலட்சார்ச்சனை நடைபெறும். அன்றிரவு புதிய அன்ன வாகனத்தில் அம்பாளின் வீதிஉலா இடம்பெறும்.

இரு தினங்களிலும் பஜனைகள் இசைநிகழ்ச்சிகள் முதலியன சிறப்பம்சமாக இடம்பெறும். (அ)

### மேயர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், கூட்டணி எம். பி.க்கள் பிரமுசர்கள், சமயத்தலைவர்கள், நீதிபதிகள், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா மற்றும் செயலகஅதிகாரிகள், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (மா)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper in Central P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.